Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu

www.nimirvu.org

பார்வை – 28 | வைகாசி, 2019 | பக்கங்கள் – 24 | விலை – ரூபா 20.00




## முள்ளிவாய்க்காலும் இனவழிப்பின் தொடர்ச்சியும்



உள்ளூர் உற்பத்தியில் சாதிக்கும் பிரணவசக்தி தொழில் நிறுவனம்



உயிர்த்த ஞாயிறு படிப்பினை



தமிழ் மக்களை என் இதயத்தில் வைத்திருப்பேன்

ஆராயும் அறிவே நிமிர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு கொள்ள: 0775905985





# உள்ளூர் உற்பத்தியில் சாதிக்கும் பிரணவசக்தி தொழில் நிறுவனம்

துருவன்

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணத்தின் வலிகாமம் மேற்கில் உள்ள வழக்கம்பரை, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் என்கிற முகவரியில் பிரணவசக்தி தொழில் நிறுவனம் இயங்கி வருகிறது. இதனை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார் திருவாதவூரர் திருக்குமரன். இவர் இந்த நிறுவனத்தைத் தனது குடும்ப அங்கத்தவர்களைக் கொண்டே இயக்கி வருகிறார். இவரது மனைவி ஜெயக்குமாரி வலது கரமாக இருந்து தொழிலை கவனித்து வருகின்றார். யாழ்மாவட்ட சிறுதொழில் முயற்சியாளர் சங்கத்திலும் தலைவராக இருந்து சக முயற்சியாளர்களின் முன்னேற்றத்துக்கும் அயராது உழைத்துள்ளார் திருக்குமரன்.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மாணவரான இவர், உயர்கல்வியை முடித்து யாழ்ப்பாண பல்கலையின் நுண்கலைப்பீடத்துக்கு தெரிவாகி அதில் வயலினை பிரதான பாடமாக கொண்டு 2007 இல் பட்டம் பெற்றுள்ளார். அரசாங்க வேலையில் நாட்டமில்லாத காரணத்தினால் சொந்தமாக தொழில் முயற்சியில் இறங்கி தொழிலதிபர் ஆகவேண்டும் என்ற இலக்குடன் அதற்கான தயார்ப்படுத்தலில் இறங்கி இருக்கிறார்.

**அவர் சொன்னவை:**

படிக்கும் காலத்தில் யாழ்ப்பாணம் தொழிற் பயிற்சி கல்லூரியில் படித்து இலத்திரனியல் உபகரணங்களைத் திருத்தும் வேலையைக் கற்றேன். அதனைத்தொடர்ந்து இலத்திரனியல் இசைக் கருவிகளை திருத்தும் வேலையைச் செய்தேன். தொடர்ந்து இலத்திரனியல் சுருதிப் பெட்டியை நானே வடிவமைத்து உருவாக்கினேன். இதற்காக 2007 இல் ஜனாதிபதி விருதும் கிடைத்தது. 2009 யுத்தம் முடிவடைந்த பிற்பாடு எமது கலை கலாச்சார சமூகம் பாரிய மாறுதல்களுக்கு உட்பட்டது. அந்த மாற்றங்களுடன் எங்களது இசைத்துறை வீழ்ச்சியைக் கண்டது.

அப்பொழுதுதான் வாழ்வாதாரத்துக்காகவாவது புதிய தொழில்த்துறையை தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. மனித இனம் இப்பூமிப்பந்தில் இருக்கும் வரை உணவுத்துறை என்பது எந்த சூழலிலும் வீழ்ச்சியடையாத துறையாக இருக்கும் என்கிற அடிப்படையில் இயற்கை உணவோடு சம்பந்தப்பட்ட தொழிற்றுறையை தெரிவு செய்தேன்.

2009 இல் இருந்து பிரதான தொழிலாக பிரணவசக்தி நிறுவனத்தை நடாத்தி வருகிறேன். முதலில் வடக உற்பத்தியை மேற்கொண்டேன். இதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள TCT எனப்படுகின்ற தியாகி அறக்கொடை நிறுவனத்தின் பல்பொருள் அங்காடி வடக விற்பனையை திறம்பட செய்து தந்தது. அதில் விற்பனை சூடு பிடித்தது. அங்கிருந்து வேறும் பல கடை உரிமையாளர்கள் பொருள்களை கேட்டு வாங்கி விற்பனை செய்யத் தொடங்கினார்கள். பின்னர் வெளிநாடுகளில் இருந்து வரும் பலர் நேரடியாக வடகத்தை வாங்கினர். பின்னர் அவர்களே அங்குள்ள பல்பொருள் அங்காடிகளுக்கும் தொகையாக வாங்குகின்றனர்.

கடந்த வருடம் மட்டும் 900 கிலோவுக்கு அதிகமான வடகங்களை கனடாவுக்கு கொள்கலனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மனித இனம் இப்பூமிப்பந்தில் இருக்கும் வரை உணவுத்துறை என்பது எந்த சூழலிலும் வீழ்ச்சியடையாத துறையாக இருக்கும் என்கிற அடிப்படையில் இயற்கை உணவோடு சம்பந்தப்பட்ட தொழிற்றுறையை தெரிவு செய்தேன்"

அனுப்பியிருந்தேன். ஏழு வகையான வடகங்களையும், 10 வகையான தேநீர் வகைகளையும், நான்கு வகையான மா வகைகளையும் செய்து வருகிறேன். பிரத்தியேக கேட்பனவுகளுக்கேற்ப பால் சார்ந்த பொருட்களான பன்னீர், சுவையூட்டிய தயிர் (யோக்கட்) என்பனவற்றை செய்து கொடுக்கின்றேன்.

வடகத்துக்கு மூலப்பொருட்களாக வேப்பம்பூ, வாழைப்பூ, சிறுகுறிஞ்சா, பாவற்காய், சின்ன வெங்காயம், எள்ளு, உளுந்து, சரக்கு மசாலா வகைகள், கறிமுருங்கையிலை, ஆவாரம்பூ போன்றவை உள்ளன. சமகலவை வடகம் எனப்படுவது மூலிகைகளும், ஆரோக்கிய பொருள்களும் சம அளவில் சேர்க்கப்பட்டது. மற்றைய வடகங்களில் உதாரணமாக வேப்பம்பூ வடகம் எனில் அதில் வேப்பம்பூவின் அளவு அதிகம் சிறுகுறிஞ்சா வடகம் எனில் அதில் சிறுகுறிஞ்சாவின் அளவு அதிகமிருக்கும். ஆனால், எல்லா வடகங்களுக்கும் ஏனைய பொருள்களும் சேர்க்கப்பட்டிருக்கும்.

தேநீர் வகைகளில் சிறுகுறிஞ்சாத்தேநீர், ஆவாரம்பூத் தேநீர், கறிமுருங்கையிலைத் தேநீர், கற்றாழைத் தேநீர் என்பனவற்றையும், மல்லிக் கோப்பி, நாவல்கொட்டைக் கோப்பி, என்பவற்றையும் உற்பத்தி செய்து வருகிறேன். கருஞ்சீரகம், சிறுகுறிஞ்சா, நாவல்கொட்டை, ஆவாரம்பூ, கறிமுருங்கையிலை ஆகியவை நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதாக அறியப்படுகின்றது. அவற்றைச் சேர்த்து நீரிழிவு கொல்லித் தேநீரையும் உற்பத்தி செய்து வருகிறேன்.

கைகால் உட்பட மூட்டு பிரச்சினைகளுக்கு முடக்கொத்தான் சேர்க்கப்பட்ட ரசப்பொடியையும், உடல் இளைப்பதற்கு கொள்ளு சேர்க்கப்பட்ட ரசப் பொடியையும் தயாரித்து வருகின்றேன். துவரம் பருப்பு, கச்சான், உளுத்தம் பருப்பு, சிவப்பு பச்சை அரிசி, சாமை, கறிமுருங்கையிலை, வல்லாரை, பொன்னாங்காணி, சிறுகுறிஞ்சா, ஆவாரம்பூ போன்ற பல பருப்பு, தானிய, இலை வகைகளை பக்குவமாக உலர்த்தி அதனை பொடியாக்கி பின் கஞ்சியாக்கக் கூடிய வகையில் இலைக்கஞ்சி மாவையும் தயாரித்து வருகின்றேன்

வாழைப்பூ இனிப்பு, ஆவாரம்பூ இனிப்பு போன்ற இனிப்பு வகைகளை தயாரிக்கும் முயற்சியிலும் உள்ளேன். வடகத்தை ஆரம்பத்தில் கையால் செய்து பின்னர் சாதாரண இயந்திரத்தின் மூலம் செய்து வந்தேன். இப்பொழுது, மழை போன்ற பாதகமான காலநிலை அமைந்தால் கூட ஒரே தரத்தில் 50 கிலோ வடகம் போடக் கூடிய வகையில் இயந்திரம் நம்மிடம் உள்ளது.

இலங்கையின் பல்வேறு இடங்களில் கண்காட்சிகளில் பங்கேற்று இயற்கையோடு வாழ்வியல் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் திருக்குமரன் முயற்சி செய்து வருகிறார். இவர் தனது நிறுவனத்தில் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை சமூகத்தை நல்வழிப்படுத்தும் அறம் சார்ந்த நூல்களான ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள் விளக்கவுரை போன்ற பல அரிய நூல்களை மறுபதிப்புச் செய்து மாணவர்களிடம் சேர்ப்பிக்கும் பணியிலும் ஈடுபட்டு உள்ளார்.

யாழ் மாவட்ட சிறுதொழில் முயற்சி பிரிவின் தலைவராக இருந்த போது பெற்ற அனுபவங்களையும் பகிர்ந்து கொள்கிறார். சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு என்று சங்கங்கள் உருவாக்கப்பட்டும் எந்த ஒரு பலமான சங்கமாக இதுவரை வளரவில்லை. "எங்களுக்கென்று பிரச்சினை வந்தால் கதைப்பதற்கு ஆட்கள் இல்லை. சங்கத்துக்குள்ளும் இரு பிரிவாக இருந்து நல்ல விடயங்களை குழப்புவதற்கும் ஆட்கள் இருக்கின்றார்கள். இதனால் சங்கத்தை பலமான அமைப்பாக கட்டியெழுப்ப வேண்டியுள்ளது." என்று திருக்குமரன் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் ஒரு தொழிலை தொடங்குவதற்கு முதலீடு தேவை. சரியான திட்டத்துடன் வங்கிகளை அணுகினாலும், அங்கு முயற்சியாளர்கள் அலைக்கழிக்கப்படுவது தொடர்கதையாகி வருகிறது. இங்கு ஆயுள்வேத மூலிகை மருந்துகளை தயார் செய்தால் அதற்கு பல்வேறு வழிகளிலும் தடைகளை ஏற்படுத்துகின்றார்கள். ஆனால்,

(7 ஆம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# ஆனந்தசுதாகரனின் விடுதலையே முதல் தேவை

நீதிமன்ற அவமதிப்புக்குள்ளாகி சிறைத்தண்டனை பெற்று வந்த ஞானசார தேரர் ஜனாதிபதியின் விசேட பணிப்பின் பேரில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். இச்சம்ப வம் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு அதிர்வலைகளையும் ஏற்படுத்தி உள்ளது.

2008 இல் பயங்கரவாத தடை சட்டத் தின் கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழ் அரசியல்கைதி ஆனந்தசுதாகரனின் மனைவி யோகராணி கடந்த 15.03.2018 அன்று கணவனின் தொடர்ச்சியான பிரிவைத் தாங்க முடியாமல் நோய் வாய்ப்பட்டு இறந்தார். இந்நிலையில் அவர்களின் பிள்ளைகள் நிர்க்கதிக்கு உள்ளாகினர். ஆனந்தசுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி தமிழர் தரப்பில் பல்வேறு போராட்டங்களும் இடம்பெற்றன.

ஆனந்தசுதகரன் விரைவில் விடு விக்கப்படுவார் என ஜனாதிபதி வாக் குறுதி வழங்கிய நிலையில் இதுவரை யில் விடுவிக்கப்படவில்லை. சின்னஞ் சிறுசுகளின் வளமான எதிர்காலம் கருதி கட்டாயம் விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும். எதற்கு முன்னுரிமை கொடுப் பது என உணராத ஜனாதிபதி தனது எதிர்கால இனவாத அரசியல் நோக்கம் கருதி மாத்திரமே ஞானசாரதேரரை விடுவித்துள்ளார்.

ஆனால், சிறுபான்மை இனங் களுக்கு எதிராக கலவரங்களை உண்டாக்கியவர் என அறியப்பட்ட ஒரு பச்சை சிங்கள இனவாதியை விடுதலை செய்ய ஜனாதிபதி கையெழுத்திட்ட மையை ஏற்றுக் கொள்ள முடியாது.

சிங்கள மேலாதிக்கம், பௌத்த சிந்தனைவாதம் இந்த நாட்டில் மேலோங்கியுள்ள வரை, இந்த நாட்டில் அமைதி நிலவும் என எதிர்பார்க்க முடியாது.

வடக்குக்கு ஒரு நீதி, தெற்குக்கு ஒரு நீதி. இது தான் இலங்கையை ஆளும் அரசாங்கங்களின் கணக்காகும்.

தமிழ் அரியல்கைதிகள் சிறைகளில் உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடு படும் போதெல்லாம் விரைவில் விடு விப்பதாக அரசாங்கம் பொய் வாக்குறுதி களை அள்ளி வழங்கும். ஆனால் நடை முறையில் அது நடப்பதில்லை. எம் கண் முன்னே சிறைகளில் அரசியல் கைதிகள் வாடுவதால் அவர்களின் குடும்பங்கள் நடுத்தெருவுக்கு தள்ளப் பட்டுள்ளன. பிள்ளைகளின் வளமான எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது. குடும்பங்களின் பொருளாதாரம் கடு மையாக பாதிக்கப்பட்டுள்ளது.

சிறைகளில் வாடும் நூற்றுக்கணக் கான ஆனந்தசுதாகரன்கள் நிச்சயம் விடுதலை பெற வேண்டும்.

போர் முடிந்து 10 ஆண்டுகள் கழிந்த பின்னரும் அரசியல் கைதிகளை தொடர்ந்தும் ஏன் சிறைகளில் வைத் திருக்க வேண்டும். சிங்கள அரசியல் தலைவர்களின் இனவாத அரசியலுக்கு பலியாடுகளா தமிழர்கள்?

- செ. கிரிசாந் -

முன் பக்க படம் :- மயூரப்பிரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிக்கும் வல்லரசுகளின் ஆதிக்கத்துக்குள் அழிக்கப்படும் மனிதம்



அருட்பணி S.D.P. செல்வன்
கோப்பாய்

வரலாறு ஒரு பக்கம் சார்ந்தது. முக்கியமாக, அழிவுகளின் கொடூரங்களை அவனிக்கு காட்டி தனக் குத்தானே சான்றிதழ்களை போட்டிபோட்டு வழங்கிக் கொள்ளும். கொடூரங்களின் விளைவுகளை மூலதன மாக்கி சர்வதேச விவகாரங்களில் ஈடுபடும். அரசியல், சமூக, பொருளாதார, சமய, கலாசார, கல்வி, கருத் தியல் துறைகள் அனைத்திலும் தனக்கு முன்னேற்றம் என சொல்லப்படும் ஒன்றை அடையும் முனைப்பு களில் இருப்பதுதான் இந்த அழிவு வரலாறு.

'கடவுள் சித்தம் காப்பாற்றியது', 'ஏன் கடவுள் காப்பாற்றவில்லை?', 'அழித்தவர்களை எம்மவர்கள் அழிக்காவிட்டாலும் கடவுள் விரைவில் அழிப்பார்', 'அழித்தால்த்தான் பரலோகம்', 'ஆலயத்துக்குள் இறந் தோருக்கு பரலோகம்'... இவ்வாறு பல பல வரலாறு கள் கடவுளை மையமாக்கி எழுதப்படுகின்றன. இயேசுவின் உயிர்ப்புவிழா (21.04.2019) அன்று இலங்கையில் கத்தோலிக்க ஆலயங்கள் இரண்டிலும் சீயோன் ஆலயம் ஒன்றிலும் இஸ்லாமிய அமைப்பால் தாக்குதல்கள் நடத்தப்பட்டது என்பதால் சமயங்கள் கடவுளை தொடர்புபடுத்தி வரலாறை தம்நோக்கில் ஆக்குவது தவிர்க்க முடியாதது தான். ஆனால் அதனையும் கடந்து 'அழிப்பு ஆதிக்க வலைப்பின்னல் களின் இருப்பையும் இயக்கத்தையும்' ஆழமாக நோக்குவதும் தவிர்க்க முடியாதது.

'அழிப்பு தவறு, அழிக்கவே கூடாது', 'ஆரோக்கியமான ஆக்கத்துக்காக அழிவுமைய அழிப்பு மூலங்களையும் அதன் முகவர்களையும் அழிப்பது நல்லது', 'அழிவுகள், அழிப்புகள் தொடரட்டும் ஏனெனில் அழிப்பு நடைபெறும் களம் எமக்கு இலாபம் தரும் சந்தை', 'அழிப்பில் ஈடு பட்டுள்ளோர் பெரும்பலசாலிகள், எம்மால் ஒன்றும் செய்யமுடியாது', 'அழிவுகள் தவிர்க்க முடியாதவை எனினும் நாம் அதன் மத்தியிலும் வாழ வேண்டும்'..... இவ்வாறாக பல வரலாறுகளும் இன்று எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 'அழிப்பு' என்பது நல்லதா, கெட்டதா என்பதைக் கடந்து அழிப்பு என்பது தமது பலத்தை வெளிப்படுத்தப் பாவிக்கப்படும் பிரச்சார ஊடகமாகிவிட்டதா எனச் சிந்திப்பது காலத்தின் தேவையாகி விட்டது. இந்தத் தாக்குதல்கள் இதற்குப் பொருத்தமான உதாரணம்.

நடைபெற்ற தொடர் தற்கொலை மற்றும் குண்டுத் தாக்குதல்களால், கொழும்பு, தெமட்ட கொடை, தெஹிவளை, நீர்கொழும்பு, மட்டக்களப்பு எனுமிடங்களில் 253 பேர் கொல்லப்பட்டனர் (சுகாதார அமைச்சின் தகவல்). 500 இற்கு மேற்பட்ட வர்கள் காயமுற்றனர். சாதாரண மனிதர்களை கொல்லுவதும் உடல் உள ரீதியில் காயப்படுத்து வதும் எந்தவிதத்திலும் சரியானது என நியாயப்படுத் தக்கூடிய ஒன்றல்ல. இந்த அழிவுகளை பற்றி அறிந் தோர் மற்றும் காணொலிகளில் பார்த்தோர் இக் கொடூரமான தாக்குதல்களுக்கு காரணமானவர்களை கொல்ல வேண்டும் எனக் கூறியிருந்தமை தெரிய வந்தது. முக்கியமாக சிறுவர்கள் இதனைச் செய்தவர் களை கடவுள் அழிப்பார் எனவும் கூறியுள்ளனர். சில கிறீஸ்தவர்கள் 'உயிரை எடுப்பதல்ல உயிரைக் கொடுப்பதே கிறிஸ்தவ நெறி' எனவும் 'கடவுள் தண்டிப் பார்' எனவும் சில இடங்களில் கூறியுள்ளனர். கிறிஸ்தவர்கள் அழிக்கப்பட்டதை மட்டும் வரலாறு என நோக்காமல் கிறிஸ்தவர்களும் பலர் கொல்லப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இருந்தனர் என்ற உலக வரலாற்றை எடுத்துக் கூறவேண்டும்.

சிலுவைப்போர்கள் உலக வரலாற்றில் இஸ்லாமியருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே நடைபெற்ற வரலாற்றை எடுத்துக்காட்டுகின்றது. கி.பி 11 ஆம் நூற்றாண்டிலிருந்து 12 ஆம் நூற்றாண்டு வரை 176 ஆண்டுகள் சிலுவைப்போர்கள் நடைபெற்றன. எருசலேம் உட்பட புனித நிலங்களை மீட்கும் புனிதப்போராக இவை காணப்பட்டன. போருக்கு செல்லும் ஒவ்வொருவரும் தம்மை திருப்பயணிக ளாக, கிறிஸ்துவின் போர் வீரர்களாக நோக்கினர். போர் எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாதது. இது கிறிஸ்துவின் பெயரால் முன்னெடுக்கப்பட்டது வரலாறு என்பதை யாரும் இருட்டடிப்பு செய்ய முடியாது. இந்த பின்னணியில் மதங்களின் பெயரால் நடைபெற்ற போர்களை மட்டுமல்ல எந்தப்போரையும் நியாயப்படுத்த முடியாது. போர்கள் மனிதத்துக்கு முக்கியத்துவம் கொடாத மனிதர்களின் இருப்பையே சுட்டிநிற்கிறது. அது இன்றும் தொடர்கிறது.

உலகின் வரலாறு அழிப்பின் பலத்தை வைத்தே கணிக்கப்பட்டது என்பதை யாரும் மறந்து விட முடியாது.

பனிப்போர்க் காலத்தில் அமெரிக்காவும் ரஷ்யாவும் தமக்கிடையே உள்ள சமபலத்தை நிறுவ பல்வேறு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை யும் போர்க்களமாக்கின. ஒரு இனம் தமது இருப்புக் கான அடிப்படை போராட்டங்களை இயல்பாக மேற் கொண்ட போதும் அவை இந்த வல்லரசுகளின் பலப் பரீட்சையால் பல்வேறுபட்ட தாக்கங்களுக்கும் செல் வாக்குகளுக்கும் உள்ளாகின. போராட்ட இலக்கு மற்றும் முறைகள் மக்கள் மையத்திலிருந்து வல்ல ரசுகள் மையமாக மாறவும் அதனால் அப் போராட்டங்கள் பின்னர் அழியவும் இவ்வல்லரசு களின் தலையீடுகள் காரணமாகின. பின்னர் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின் அமெரிக்கா மட்டுமே உலகவல்லரசாக இருந்தது. இக்காலத்திலும் இதன் ஆதிக்கம் முழுவுலகிலும் இருப்பதை அங்கீகரிக்காத எந்த நாடும் சவாலுக் குட்பட்டது. தற்போது பலநாடுகள் தம்மை வல்லர சாக்க முயற்சிக்கின்றன. வல்லரசுகளின் ஆதிக்க வரலாறு இருநாடுகள், ஒரு நாடு, என்று இருந்து தற்போது பலநாடுகள் எனும் வலைப்பின்னல் ஆகி விட்டது (History of ‘Bi Polar, Uni Polar and Multi Polar')

**“வரலாறு என்பதை யாரும் இருட்டடிப்பு செய்ய முடியாது. இந்த பின்னணியில் மதங்களின் பெயரால் நடைபெற்ற போர்களை மட்டுமல்ல எந்தப்போரையும் நியாயப்படுத்த முடியாது. போர்கள் மனிதத்துக்கு முக்கியத்துவம் கொடாத மனிதர்களின் இருப்பையே சுட்டிநிற்கிறது. அது இன்றும் தொடர்கிறது”**

வல்லரசாக தம் பலத்தை நிறுவும் நாடுகளில் தற்போது அமெரிக்கா, இந்தியா, மேற்கு நாடுகள் என ஒரு பக்கம் இருக்க அதற்கு எதிராக சீனா, பாக்கிஸ்தான், ரஷ்யா போன்ற நாடுகளும் உள்ளன. இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள இந்தியா (தமிழ் நாடு), இலங்கை என்பன மிகவும் முக்கியமானவை. அமெரிக்காவின் வல்லரசு ஆதிக்கத்துக்கு சவாலாக இருப்பது ஆயுதக்குழுவாக இயங்கும் இஸ்லாமிய அமைப்பான ஐ. எஸ். ஐ. எஸ் (The Islamic State of Iraq and the Levant, also known as the Islamic State of Iraq and Syria). இஸ்லாமிய உலகைப் பார்க்கும்போது பாகிஸ்தான், ஆப்கானிஸ் தான், மத்திய கிழக்கு நாடுகள், சவூதி அரேபியா, மற்றும் ஈராக், சிரியா என்பவை ஊடாகவுள்ள வலைப்பின்னல் மிகவும் முக்கியம். ஒசாமா பின்லேடன், சதாம் உசேன் போன்றோரின் அழிப்பும் இஸ்லாமிய உலகை இலகுவில் பயன்படுத்தக் கூடிய ஒன்றாக எண்ணும் போக்கை அதிகரித்து விட்டது. இந்திய – பசுபிக் மூலோபாய (Indo – Pacific Strategy) பின்னணி இஸ்லாமிய உலகின் இருப்புக்கு அச்சுறுத்தலாகி வருகிறது.

ஈராக்கிலும் சிரியாவிலும் பாரியளவை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஐ. எஸ். ஐ. எஸ் அப்பிரதேசங்களை தற்போது இழந்துவிட்டது. அமெரிக்கா மற்றும் சிரியாவின் குர்திஷ் கிளர்ச்சி யாளர்களதும் ஆதிக்கம் அங்கு மேலோங்கிவிட்டது. இதனால் பின்வாங்கிய ஐ. எஸ். ஐ. எஸ் அமைப்பினர் ஈராக், சிரியா மற்றும் யோர்தான் பாலைவனப் பகுதிகளுக்கு சென்றிருக்க வேண்டும். அத்துடன் சொந்த நாடுகளுக்கும் திரும்பியிருக்கலாம். இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பலத்தை உறுதி செய்ய பலத்த பரப்புரைகளை செய்து வருகின்றனர். இவர்களால் கற்றோரையும் மற்றும் செல்வந்தர்களையும் இஸ்லாமிய உலகு எனும் கருத்தியலுக்குள் கொண்டுவர வலுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தென் ஆசியாவில் இவர்களின் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. சிறுபான்மை முஸ்லிம்களை(Shias of ethnic Hazara) இலக்கு வைத்து ஆப்கானிஸ்தானில் கடந்த சில ஆண்டுகளாகத் தாக்குதல்கள் நடை பெற்றன. ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடைய ஜமாத் உல் அஹ்ரார் (Jamaat-ul-Ahrar) குழு 2016 இல் இயேசுவின் உயிர்ப்பு விழா அன்று லாகூரில் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து தாக்குதலை நடத்தியுள்ளது. இந்த வருடம் இயேசுவின் உயிர்ப்பு விழா அன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இந்த அமைப்பின் பலத்தை இன்னும் வெளிக்காட்டுகின்றது.

தமது ஆதிக்கத்தை நிலைநாட்டும் வெறியுடன் யார் செயற்பட்டாலும் அது தவறே. இலங்கை இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருப்பதால் அதனை தமது ஆக்கிரமிப்புக் குள் வைத்துக்கொள்ள பல வல்லரசுகளும் முயற்சிக் கின்றன. குறுகிய நோக்குடன் இந்த வல்லரசுகளுக்கு தம்மை விற்பவர்களாலேயே பல்வேறுபட்ட சிக்கல் களுக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச சக்திகளுடன் எத்தகைய உறவைப் பேணுவது பொருத்தம்? பூகோள வல்லரசுகளுடன் உறவைப் பேணும்போது கட்சி அரசியலா அல்லது மக்கள் அரசியலா அதிக செல்வாக்குச் செலுத்து கின்றது? குறுகிய சுயநல ஆதாயங்களுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அழிவையே நீண்ட காலத்திலும் குறுகிய காலத்திலும் தரும்.

2009 வைகாசியில் நடைபெற்ற உள்நாட்டுப் போர் இராணுவரீதியில் முடிவுக்கு கொண்டுவரப் பட்டது. இதனை செய்ய எந்தந்த வல்லரசுகள் உதவின, அவை என்ன எதிர்பார்த்தன... என்பவற்றை யோசிக்க வேண்டும். போரின் பின் மேற்கொள்ளப்பட்ட மீள் கட்டுமான நடவடிக்கைகள் என்ன அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன? மேற்கொள்ளப்படுகின்றன? மனிதம் பேணப்படுகின்றதா? மனிதம் அழிக்கப்படு கின்றதா?

இலங்கையில் 2019 தேர்தல் ஆண்டாகி விட்டதால் எப்படிப்பட்ட நகர்வுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன? இவை கட்சி அரசியலுக்கா? மக்கள் அரசியலுக்கா? வல்லரசுகளின் ஆதிக்கங்களுக்கு மத்தியிலும் வாழவேண்டுமானால் மனிதம் பேணு வோரை மக்கள் அரசியலுக்குள் இணைப்பதன் மூலம் மட்டுமே அது சாத்தியமாகும். ●

---

**(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இங்கிருந்து மூலிகைகளை எடுத்து மருந்துகள் கொழும்பில் தயாரிக்கப்பட்டு இங்கு வருகின்றன. தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க வேண்டும். உணவுசார்ந்த தொழிலில் இருப்பவர்களுக்கு சுகாதார பரிசோதகர்கள் பெரும் பிரச்சினையாக உள்ளார்கள். உணவு தயாரிக்கும் இடத்தின் நிலப்பகுதி தண்ணீர் தேங்கி நிற்காதவாறு வழிந்தோடக் கூடிய நிலையில் இருக்க வேண்டும். ஆனால், பொது சுகாதார பரிசோதகர்கள் கட்டாயம் நிலத்துக்கு மாபிள் பதிக்க வேண்டுமென சொல்கிறார்கள். ஆனால், இதற்கு தீர்வுகாண கூட்டங்களை ஏற்படுத்தி கதைக்கும் போது மாபிள் பதிக்க சொல்லி சட்டத்தில் சொல்லவில்லை என்கிறார்கள்.

பொதுச் சுகாதார பரிசோதகர்களும் – தொழில் முயற்சியாளர்களும் சுமூகமாக பேசி தீர்வு காணக் கூடிய சூழல் ஒரு சில இடங்களில் தான் உள்ளது. உணவுற்பத்தி விடயங்களில் தயாராகும் உணவு சுகாதாரமானதாகவும், கிருமித்தொற்றுக் களின்றியும் இருக்க வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. இங்கே தேவை யற்ற கெடுபிடிகளே அதிகம். சின்னப் பிரச்சினைக்கும் வந்து இப்போது பார் உன்னை நீதிமன்றுக்கு கொண்டு செல்கிறேன் என மிரட்டும் சூழ்நிலையும் உள்ளது. இந்நிலைமை எங்கள் வடக்கு கிழக்கு பகுதிகளில் மட்டும் தான் உள்ளது.

வியாபார நிறுவனங்களை பதிவு செய்வதில் பிரதேச சபைக்கும் பிரதேச செயலகத்துக்கு இடை யிலுள்ள முரண்பாடு இன்னுமொரு தலையிடி. பிரதேச சபைக்கு போனால் சொல்வார்கள் செயல கத்தில் முதலில் பதிவு செய் என, செயலகத்துக்கு போனால் சொல்வார்கள் சபையில் முதலில் பதிவு செய் என, மாறி மாறி கூறுவார்கள். இந்த இடத்திலேயே முயற்சியாளர்கள் பலர் அடுத்த படிக்கு நகராமல் முடங்கி விடுகிறார்கள். மாவட்ட செயல கத்தில் கூட இந்த விடயம் குறித்து கேட்ட போது தெளிவில்லாத நிலை தான் இருந்தது என்று கூறினார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முள்ளிவாய்க்காலும் இனவழிப்பின் தொடர்ச்சியும்

–சிந்து–

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை நடந்து முடிந்து பத்து ஆண்டுகள் நிறைவடைந்திருக்கின்றன. ஈஸ்டர் தாக்குதலுக்கு பிறகான நிலைமையில் வடக்கில் கூடுதல் பதற்றம் திட்டமிட்டு தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் பத்தாவது ஆண்டு நிறைவு நாள் நடந்து முடிந்துள்ளது.

கடந்த ஆண்டை விட இம்முறை ஒப்பீட்டளவில் குறைவான மக்களே முள்ளிவாய்க்கால் மண்ணில் இடம்பெற்ற நினைவேந்தலில் பங்கேற்றனர். ஏராளமான இராணுவ சோதனைச் சாவடிகளைக் கடந்து, இராணுவத்தினரின் இன்னோரன்ன கேள்விகளுக்கு பதில் சொல்லித் தான் அவர்கள் நினைவேந்தலில் பங்கேற்றார்கள்.

இந்நிகழ்வில் பங்கேற்ற ஊடகவியலாளர், மனித உரிமை செயல்பாட்டாளர்களின் புகைப்படக் கருவிகள் இராணுவத்தினரால் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததோடு அவர்களும் பலத்த விசாரணைக்கு ஆளாக்கப்பட்டு இருந்தார்கள். அத்துடன் புகைப்படக்கருவிகளில் உள்ள ஒவ்வொரு படங்களையும் விடாமல் இராணுவத்தினர் பார்த்து இருந்தார்கள். இப்படியாக ஓர் அச்சுறுத்தலுக்குள் தான் நினைவேந்தல் இடம்பெற்றது.

இறுதிப்போரில் தாயையும், தனது ஒற்றைக் கையையும் இழந்த சிறுமியே பிரதான சுடரை ஏற்றினார். வள்ளிபுனம் பிரதேசத்துக்கு பொறுப்பான பங்குத்தந்தை முள்ளிவாய்க்கால் பிரகடனத்தை வாசித்தார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் வருமாறு,

கொல்லப்பட்ட எமது உறவுகளின் கனவுகளை நினைக்கின்றோம். முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தின் ஒரு தசாப்தத்தை நினைவுகூரும் ஒட்டுமொத்த தமிழினம் அவலங்களை மட்டும் நினைவு கூரவில்லை. சிங்கள–பௌத்த சிறிலங்கா அரசின் அடக்குமுறைக்கெதிராக தமிழினம் வெகுண்டெழுந்த வரலாற்றையும் அவற்றின் வெவ்வேறு வடிவங்களையும், கூட்டு உரிமைக்கான தியாகத்தையும் நினைவு கூருவது வரலாற்றுக் கடமை.

சிறிலங்கா அரசு தமிழர் உரிமைக்கான போராட்டத்தை பயங்கரவாத முத்திரை குத்தி அதன் நியாயத்தன்மையையும், நம்பகத்தன்மையையும் கேள்விக்குட்படுத்தி வந்துள்ளது. சர்வதேச மயப்படுத்தப்பட்ட பயங்கரவாத பிரச்சாரத்தினூடு ஆயுதப் போராட்ட வடிவம் மௌனிக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் ஆயுத மௌனிப்பின் பின் தமிழர் போராட்ட வடிவங்கள் வெவ்வேறு வழிகளில் முன்னெடுக்கப்பட்டன.

முள்ளிவாய்க்காலின் பின்னான தசாப்தத்தில் வரலாற்றில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான நீதி வேண்டிய கோரிக்கை வலுப்பெற்றது. தமிழர்கள் ஓர் இன அடையாளத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக கொல்லப்பட்டார்கள், சித்திரவதை செய்யப்பட்டார்கள், வன்புணரப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வீக வாழ்விடங்களிலிருந்து விரட்டி அடிக்கப் பட்டார்கள். தமிழர்கள் வந்தேறு குடிகளாக சித்தரிக் கப்பட்டு சிறிலங்கா சிங்கள–பௌத்ததேசம் அது சிங்கள–பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானது என காலனித்துவத்தில் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் சிறிலங்கா அரசு நவ காலனித்து வத்தை கட்டமைத்தது. இது தமிழினத்தின் ஒட்டு மொத்த இருப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

தமிழினத்தின் மீது நடந்தேறும் கட்டமைக் கப்பட்ட இனப்படுகொலையை ஐ.நாவும் சர்வதேச சமூகமும் வெறுமனே அவதானித்துக் கொண்டி ருப்பது கவலைக்குரியதானது. அந்திய மீட்பர்களை விடுத்து மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்து, நினைவு கூரலை சமூக இயக்கமாக மாற்றி சபதம் செய்வோம். எங்கள் தொப்புள்கொடி உறவுகளின் கல்லறைகளின் மீது சத்தியம் செய்வோம்.

- முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிவேண்டி இனப்படுகொலையாளி களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த
- தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்திற்கு உரியவர்கள் என்பதையும் தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் ஒரு போதும் பாரதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமையினதும் அடிப்படையிலும் தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என்பதை யும் தமிழர்கள் சார்பில் கோர

**“மக்கள் பலத்தை நம்பி நினைவுகூரலை போராட்ட வடிவமாக, சமூக இயக்கமாக மாற்ற வேண்டிய சூழலுக்குள் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது”**

- தமிழர் இனஅடையாளத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனப்படுகொலையை தடுக்க
- தமிழர் சமூக அமைப்புக்களை பலப்படுத்தி விடுதலைக்காக முனைப்புடன் உழைக்க

மக்கள் பலத்தை நம்பி நினைவுகூரலை போராட்ட வடிவமாக, சமூக இயக்கமாக மாற்ற வேண் டிய சூழலுக்குள் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது.

அடக்குமுறைக்குள் வாழும் சமூகத்திற்கு நினைவுகூரல் ஒரு போராட்ட வடிவமே. தமிழ்த் தேசிய நினைவுத்திறம் அடக்குமுறைக்கெதிரான ஊடகம் என்பதை நினைவிற் கொண்டு உறுதி பூணுவோம். தமிழர் உரிமையை வென்றெடுப்பதற் கான பயணிப்பில் இணைவோம்.


முள்ளிவாய்க்காலோடு போர் முடிந்து விட்டது என்று தானே பலரும் சொல்கிறார்கள். உண்மை யில் பெரும் சத்தமாக இடம்பெற்ற போர்தான் முடிந்து விட்டது. ஆனால், சத்தமேயில்லாத கட்டமைக்கப் பட்ட ஓர் இனவழிப்பு ஈழத்தில் தொடர்ந்து கொண்டு தானிருக்கின்றது.

தமிழ் இனத்தின் தேசிய பிரச்சினைகளில் முதன்மையானது காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தான். ஏனெனில் பல உறவுகள் இன்னமும் தங்கள் பிள்ளையோ, கணவனோ எங்காவது உயிருடன் இருக்கலாம் என்கிற ஏக்கத்தில் தான் வாழ்ந்து வருகின்றார்கள். காணாமல் ஆக்கப் பட்டோருக்கு நீதி, அரசியல் கைதிகள் விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிப்பு போன்ற காரணங்களை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து தான் எமது பிரதான தமிழ் அரசியல்தலைமைகள் தேர்தலில் வென்றார்கள். ஆனால், அவர்கள் தேர்தலில் வென்றதும், தங்கள் சொந்த நலன்களை மட்டுமே கவனத்தில் கொள்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களை மறந்து விட்டார்கள்.

அரசபடைகளாலும், புலனாய்வாளர்களாலும் இலக்கு வைக்கப்படும் நபர் ஒருவர், எங்கு போகிறார் வருகிறார் என்பதை அவதானித்து, அவரைப் பின் தொடர்ந்து சென்று திட்டமிட்டு மக்கள் கூட்டத்தில் இருந்து அவரைப் பிரித்தெடுத்து இராணுவ, அரச சார்பு துணை இராணுவ குழுக்களால் ஆள் கடத்தல், கைது சம்பவங்கள் இலங்கையில் நடந்தேறி

(11 ஆம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுவர் விடுதலை பெறட்டும்!

-தோழர் தியாகு-

தமிழர் எழுவர் விடுதலை மீண்டும் ஒருமுறை கருத்துப்போராட்டத்திற்கு கருப்பொருளாகியுள்ளது. எல்லாச்சிக்கல்களும் தீர்ந்து பேரறிவாளன், சாந்தன், நளினி, முருகன், ரவிச்சந்திரன், ஜெயக்குமார், ராபட்பயஸ் ஆகிய எழுவருக்கும் இருபத்தெட்டாண்டு காலசிறையடைப்பின் பின் இரும்புக்கூட்டின் கதவு திறக்கப்படும் நாள் நெருங்கிவிட்டது.

ஆனால் இப்பொழுதும் தமிழர் எழுவரின் விடுதலையை விரும்பாதவர்கள் இருக்கின்றார்கள். இருந்துவிட்டு போகட்டும். அவர்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதிலும் தவறில்லை. அது அவர்களுக்கு உள்ள கருத்துரிமை. ஆனால் தமிழர் எழுவரின் விடுதலைக்கு வாய்ப்பே இல்லை என்று வம்படியாக அழிச்சாட்டியம் செய்யும் போது நாம் வாழாதிருக்க முடியாது. எழுவர் விடுதலையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்ய வேண்டும். அவர்கள் வீசுவதற்கு பந்து இல்லாததால் கல்லெடுத்து அடிக் கின்றார்கள் என்பதே உண்மை. இப்பொழுது ஆளுனர் முடிவு செய்ய வேண்டும். ஆளுனர் என்றால் தனிப் பட்ட புரோகிதர் அல்ல. தமிழக அமைச்சரவையின் பரிந்துரையை அவர் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மீள்பார்வை செய்யும்படி அவர் ஒரு முறை திருப்பி அனுப்பலாம். அமைச்சரவை தன் முடிவில் உறுதியாக இருந்தால் அவருக்கு வேறு வழியில்லை. இதுதான் சட்டப்படியான நிலவரம். அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 161 இற்கு விளக்கம் அளித்துள்ள பற்பல உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற தீர்ப்பு களும் இதில் தெளிவாக உள்ளன.

**“தமிழக அமைச்சரவையின் பரிந்துரையை அவர் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். மீள்பார்வை செய்யும்படி அவர் ஒரு முறை திருப்பி அனுப்பலாம். அமைச்சரவை தன் முடிவில் உறுதியாக இருந்தால் அவருக்கு வேறு வழியில்லை”**

நடுவர் புலனாய்வுக்கழகம் (சி.பி.ஐ) புலனாய்வு செய்த வழக்கை இந்திய அரசின் இசைவு பெறாமல் விடுதலை செய்ய முடியாது என்று வாதுரை ஒன்று முன்வைக்கப்படுகிறது. இதற்கு ஆதரவாக 2015ஆம் ஆண்டு மார்கழியில் இந்திய உச்சநீதிமன்றத்தில் முழு ஆயம் அளித்த தீர்ப்பு எடுத்துக்காட்டப்படு கிறது. இந்த தீர்ப்பு சரியோ தவறோ குற்றநடைமுறைச் சட்டத்தின் பிரிவு 435 ற்கு இப்படியொரு விளக்கம் தந்திருப்பது உண்மை. ஆனால் அரசமைப்புச் சட்டத்தின் படி உறுப்பு 161ற்கு இப்படிப்பட்ட கற்றுத் தலை இல்லை என்பதும் இதே தீர்ப்பில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. இப்பொழுது அமைச்சரவை எடுத்துள்ள முடிவும் ஆளுனர் எடுக்க வேண்டிய முடிவும் அரசமைப்பின் பிரிவு 161இன் படி தானே தவிர குற்றநடைமுறைச்சட்டத்தின்படி அல்ல. இந்த இரு சட்டங்களுக்கும் முரண்பாடு இருக்குமானால் இரண்டில் எது சரி என்று கேட்டுப்பார்க்கலாம். குற்றநடைமுறைச்சட்டம் அதாவது மன்றச்சட்டம் நாடாளுமன்றம் இயற்றிய சட்டம் அரசமைப்புச் சட்டம் என்பது அடிப்படைச்சட்டம் இந்த இரு சட்டங்களில் எது எதைக்கட்டுப்படுத்தும் என்பதைக் கூறாமலே விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சநீதிமன்றம் 1981 ஆம் ஆண்டு மாரூராம் வழக்கில் தெட்டத்தெளிவாக்கிவிட்டது. 1989 ஆம் ஆண்டு கலைஞர் முதல்வரானபோது நான் அவருக்கு அளித்த விண்ணப்பத்தை ஏற்று பத்தாண்டுகளில் 490 வாழ்நாள் சிறையாளர்களை அதாவது ஆயுட்கை திகளை விடுதலை செய்தார். 1992 அல்லது 1993 இல் அப்போதைய சட்ட அமைச்சர் ஜே.எஸ்.கிருஸ்ணசாமி அவர்களுக்கு நான் மாரூராம் தீர்ப்பு அடிப்படை யில் சட்டக்குறிப்பு எழுதிக்கொடுத்தேன். அதை அப் போதைய முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் ஏற்றுக்கொண்டு அரசமைப்பின் உறுப்பு 161 ஐப் பயன் படுத்தி தன் பிறந்தநாளை முன்னிட்டு வாழ்நாள் சிறையாளர்களை 12 ஆண்டு கழித்து ஆண் கைதி களையும் பத்தாண்டு கழித்த பெண் கைதிகளை யும் விடுதலை செய்தார். தொடர்ந்து மூன்றாண்டு காலம் இப்படியே செய்தார். அப்போது குற்றநடை முறைச்சட்டம் 433 A பிரிவின்படி பதினான்கு ஆண்டுகள் கழிக்காமல் இவர்களை விடுதலை செய்திருக்க முடியாது.

மீண்டும் கலைஞர் முதல்வராக இருந்த பொழுது அண்ணா பிறந்தநாளை முன்னிட்டும் அண்ணா நூற்றாண்டை முன்னிட்டும் ஒருமுறை பத் தாண்டும் ஒருமுறை ஏழு ஆண்டும் கழித்த வாழ்நாள் சிறையாளர்களை விடுதலை செய்த பொழுது அதை வரவேற்று நக்கீரனில் எழுதினேன். அதே போன்று ராஜீவ் வழக்கு சிறையாளர்களுக்கும் இஸ்லாமிய சிறையாளர்களுக்கும் விடுதலையிலிருந்து விலக் கழித்ததை குறை கூறி எழுதினேன். என் நக்கீரன் கட்டுரை அடிப்படையில் கலைஞர் முரசொலியில் உடன்பிறப்புக்கள் எழுதிய மடல் 'தியாகுவின் உள்ளம் தீயோர்க்கு அமையுமா' என்பது. ஆகவே குற்றநடை முறை சட்டம் 435 ஆம் பிரிவையும் அதற்கு உச்ச நீதிமன்றம் அளித்த விளக்கத்தையும் காட்டி அரசமைப்புச்சட்டம் 161 ஆம் உறுப்பின்படி ஆளுனரின் பெயரில் மாநில அரசுக்குரிய அதிகாரத்தை மறுக்க இயலாது.

'இவர்கள் வில்லன்கள், பயங்கரவாதிகள், செத்தவர் முன்னாள் பிரதமர், இவர்களின் விடுதலை தவறான முன்னுதாரணமாகி விடும், இது சர்வதேச அதிர்வலைகளை ஏற்படுத்தும்' என்பன போன்ற பூச்சாண்டி வாதங்களை பல முறை உச்சநீதி மன்றத்திலே முன்வைத்தனர். அவற்றை உச்சநீதி மன்றம் புறந்தள்ளிவிட்டது. உரைப்பவர் எப்போதும் உரைத்துக்கொண்டே இருக்கட்டும். கவலைப்படாதீர் கள் தமிழர்களே. தமிழர் எழுவர் விடுதலைக்கு ஆணையிடுவதைத் தவிர ஆளுனர் புரோகித்துக்கு வேறு வேலையில்லை. புரோகித் மனம் இதை ஒப்பாது என்றால் விலகிக்கொள்ளட்டும். ஏழு தமிழர் களுக்கும் அவர்களின் விடுதலைக்காக காத்திருக்கும் நமக்கும் இளவேனில் வெகுவிரைவில். தமிழர் விடுதலைப் போர் முழக்கம் சமூகநீதி.

---

(09 ஆம் பக்க தொடர்ச்சி)

உள்ளன. இவை தமிழ் மக்களை ஒடுக்குவதற்கும், இந்த மண்ணில் இருந்து புலம்பெயர செய்வதற்கும் காரணமாக அமைந்தன.

இராணுவத்திடம் தமது உறவுகளை ஒப்படைத் ததைக் கண்கண்ட நேரடி சாட்சியமாக இராணுவத் தின் எந்தபிரிவிடம், எந்த அதிகாரியிடம் தமது கணவனை, பிள்ளைகளை ஒப்படைத்தோம் என கூறுவதற்கு உறவுகள் தயாராக இருக்கின்றார்கள். இந்த சாடசியங்களைப் பாதுகாப்பதற்கு எங்களது அரசியல் தலைமைகளிடமோ, சிவில் சமுக அமைப் புக்களிடமோ சரியான வேலைத்திட்டங்களோ அல்லது பொறிமுறைகளோ இல்லை என்பது தான் வருத்தமான செய்தி.

இன்னொரு பக்கம் இவ்வாறான சாட்சி யங்கள் வயதாகிப் போயோ, நோய்வாய்ப்பட்டோ இறந்து கொண்டிருக்கின்றார்கள். இலங்கை அரசும் ஐநாவில் தொடர்ச்சியாக கால அவகாசத்தை கேட்டு ஆண்டுகளை இழுத்தடித்து சாட்சியங்களை இல்லாது ஒழிப்பதையே கண்கூடாக செய்து வருகின்றது. தமிழர் தாயகத்தில் ஆட்கடத்தல் மற்றும் தடுத்து வைப்புக்களால் நாற்பத்தாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. பெண்களை தலைமைத்து வமாக கொண்ட குடும்பங்களே இவர்களில் அதிகம்.

அடுத்து நாங்கள் ஒவ்வொரு முறையும் வலியுறுத்தும் முக்கியமான விடயம் ஆவணப்படுத் தல் தான். முள்ளிவாய்க்கால் அவலங்களை சரியான முறையில் ஆவணப்படுத்தாமல் பத்தாண்டுகளை கடந்து விட்டோம். இனியாவது ஒரு முறையான ஆவணப்படுத்தலைச் செய்ய வேண்டும். இல்லையேல் முள்ளிவாய்க்காலில் துடிதுடிக்க இறந்த அந்த ஆத் மாக்களின் ஆவி ஒரு போதும் எம்மை மன்னிக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர்த்த ஞாயிறு படிப்பினை



– ரஜீவன் –

சித்திரை 21, 2019 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று வெடித்த குண்டுகள் கடந்த பத்தாண்டு காலமாக இலங்கை அரசாங்கம் சர்வதேசத்துக்கு 'காட்டிக் கொண்டிருந்த' படத்தை உடைத்துப் போட்டுள்ளன. இலங்கையின் இனப்பிரச்சனை தீர்க்கப்பட்டு விட்டது. புலிகள் மட்டும் தான் தனிநாடு கேட்டு நின்றார்கள். அவர்களை அழித்ததுடன் இனப்பிரச்சனை தீர்ந்து விட்டது. இலங்கை பல இன மக்கள் மீண்டும் சமாதானமாக வாழும் நாடாகிவிட்டது. சர்வதேசங்களே எமது அபிவிருத்திக்கு உதவுங்கள். சுற்றுலாப்பயணிகளே வாருங்கள், வந்து கொண்டாடுங்கள். என்றெல்லாம் படம் காட்டிக் கொண்டிருந்த இலங்கை உண்மையிலேயே இனமுரண்பாடுகளால் எக்கணமும் வெடிக்கக்கூடிய ஒரு அணுகுண்டு என்று உலகிற்கு காட்டப்பட்டுள்ளது. இங்கு இனங்களுக்கிடையேயான முரண்பாடுகள் தீர்க்கப்படவில்லை. வெறுமனே ஒரு இராணுவ வெற்றியே அடையப்பட்டுள்ளது என்பது நிதர்சனமாகி உள்ளது.

குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து முஸ்லிம் பெண்கள் தம்மை முழுதாக மறைக்கும் ஆடைகளுக்கு அரசாங்கம் தடைவிதித்தது. வைகாசி 7, 2019 அன்று அவிசாவளை புவக்பிட்டிய தமிழ் மகா வித்தியாலயத்துக்கு கற்பிக்க வந்த முஸ்லிம் ஆசிரியைகள் தலைமுடியை மூடும் மேலாடைகளை அணிந்து கொண்டு பாடசாலைக்குள் செல்லக் கூடாது என்று, நுழைவாயிலில் தடுத்து நிறுத்தப்பட்டனர். இவர்களைத் தடுத்து நிறுத்தியவர்கள் அப்பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள். ஆசிரியைகள் அணிந்திருந்த மேலாடை வகைகள் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிராதவை என்பது குறிப்பிடத்தக்கது.

குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து நீர்கொழும்புப் பகுதிகளில் தங்கியிருந்த பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அகமாதி முஸ்லிம் ஏதிலிகள் அவர்களின் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர். இவர்களை வெளியேற்றியவர்கள் பெரும்பான்மை சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்த அகதிகளை அரச படையினர் பேருந்துகளில் ஏற்றி வேறு இடங்களுக்கு கொண்டு சென்றனர். இன்று அவர்கள் காவல் நிலையங்களிலும் பள்ளிவாசல்களிலும் மிகவும் தாழ்ந்த வாழ்க்கைத்தரத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் பகுதிகளில் பொதுமக்களின் வீடுகளில் அடாத்தாக தங்கியிருக்கும் படையினர் இந்த ஏதிலிகளை தொடர்ந்தும் இருக்க அனுமதிக்குமாறு சிங்கள வீட்டு உடைமையாளர்களை நிர்ப்பந்திக்கவில்லை. ஏதிலிகள் தங்கியிருந்த இடங்களை சிங்களக் காடையர் தாக்குவதை தடுக்கும் வகையில் பாதுகாப்பு வழங்கவும் படையினர் தயாராக இருக்கவில்லை. ஏனெனில் சிங்களக்காடையர் தாக்குவார்களாக இருந்தால் அவர்களை தடுத்து நிறுத்தவோ அவர்களை எதிர்த்துத் தாக்கவோ படையினரின் இனப்பற்று விடாது.

அதேவேளை, அந்த ஏதிலிகளை வவுனியாவில் குடியேற்ற அரசாங்கம் முனைந்தது. அதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ம. சுமந்திரனும் ஆதரவு அளித்தார். ஆனால் வைகாசி 4, 2019 அன்று வவுனியாவின் மூன்று பிரதேச சபைத்தலைவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை இவ்வாறு இருக்க இஸ்லாமிய பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மீது தென்னிலங்கையில் தாக்குதல்கள் தொடர்கின்றன. வைகாசி மாத முதல் இரு வாரங்களிலும் வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த பல இடங்களிலும் பள்ளிவாசல்களும் முஸ்லிம்களின் வியாபாரத் தலங்களும் தாக்கப்பட்டன.

இலங்கையில் தமிழர்கள், முஸ்லிம்கள் சிங்களவர் என்ற மூன்று தரப்பினருக்கு இடையான பரஸ்பர இனமுரண்பாடு சற்றும் தணியவில்லை. மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சம்பவங்கள் அதையே சுட்டி நிற்கின்றன. இந்த நிலைமையில் தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள தமிழ் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த முன்னேறிய தரப்பினர் என்று தம்மைக் கூறிக்கொள்வோரின் கருத்துக்களும் வேண்டுகோள்களும் பாமரத்தன்மையாக உள்ளன.

பாகிஸ்தானிய ஆப்கானிஸ்தானிய அகதிகளை வவுனியாவில் குடியேற்றுவதை எதிர்த்தவர்கள் தமிழர்கள் என்பதால் தாமும் அவ்வினத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதையிட்டு வெட்கப்படுவதாக பல தமிழ் முற்போக்காளர்கள் சமூகவலைத்தளங்களில் எழுதினர். "எனது தமிழ் சகோதரர்களுக்கு மீண்டும் ஒரு கோரிக்கை: இதை நாம் தான் கூடுதலாக விளங்கிக் கொள்ளலாம். எமது மக்கள் இலங்கையில் துன்புறுத்தலுக்கு அஞ்சி பல நாடுகளில் தஞ்சம் புகுந்து உள்ளார்கள். எம் வாசற்படியிலிருந்து இந்த ஏதிலிகளைத் துரத்தி, நன்றி கெட்ட சமூகம் என்ற பெயரை பெற்றுக் கொள்ளாதீர்கள்!" என்று பா.உ. ம. சுமந்திரன் அவர்களும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

தமிழரின் விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆனபின்பும் இம்மண்ணைச் சேர்ந்த தமிழர்கள் தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாமல் இன்னும் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களை மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்காமல் பாகிஸ்தானிய ஆப்கானிஸ்தானிய அகதிகளை முதலில் குடியேற்ற முயற்சிப்பது எந்த வகையில் நியாயம் என வவுனியா பிரதேச சபைத் தலைவர்கள் கேள்வி எழுப்பி இருந்தனர். அந்தக் கேள்விக்கு பல தரப்பினரிடமிருந்தும் ஆதரவு இருந்தது என்பது குறிப்பிடத்தக்க விடயம். இக்கேள்விக்கு தமிழ் முற்போக்குத் தரப்பினரிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. தம்மைத் தமிழர் என்று கூறிக் கொள்வதற்கு வெட்கப்படுவதாகச் சொன்னவர்கள் வீடுவாசலை இழந்து தவித்துக் கொண்டிருக்கும் தமது சகோதர தமிழர்களுக்கு இதற்கு முன்னர் எந்தவிதமான ஆதரவுக் குரலையும் எழுப்பவில்லை.

"முஸ்லிம் மக்கள் தம் மத்தியில் தேசிய தௌகித் ஜமாத் போன்ற ஒரு பயங்கரவாத அமைப்பு தோன்ற எப்படி இடமளித்தார்கள் என்று தமக்குள் ஒரு சுயதேடலை நடத்த வேண்டும்" என்று சிங்கள தமிழ் முற்போக்காளர்களிடமிருந்து ஒரு குரல் எழுந்துள்ளது. அவர்களில் சிலரிடமிருந்து "முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல தமிழர்கள் கூட தம்மிடையே ஒரு விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாக எவ்வாறு இடமளித்தார்கள் என ஒரு சுயதேடலை நடத்த வேண்டும்" என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. ஆக, சிங்கள பேரினவாதத்தால் அடக்குமுறைகளுக்கு உள்ளான இனங்கள் தம் மத்தியில் வன்முறைக்கு எப்படி இடமளித்தார்கள் என்று சுயதேடலைச் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்த இனங்களிடையே வன்முறைக் குழுக்கள் உருவாகுவதற்கு ஊக்கியாக இருந்த புறக்காரணிகள் என்ன என்பதற்கான தேடலை இவர்கள் நடத்தத் தயாராயில்லை. அல்லது, அதற்கான பதில் தெரிந்தாலும், அந்தப் பதிலின் பின்னால் உள்ள காரணியை மாற்ற முடியாது என்பதனால், பாதிக்கப்பட்ட இனங்கள் எவ்வாறு அதனைச் சமாளித்துக் கொண்டு வாழலாம் என்ற தேடலை மேற்கொள்ளுமாறு கேட்கிறார்கள் போலும்.

இலங்கையைப் பொறுத்தவரை தேசிய இன முரண்பாடு என்பது புதிதல்ல. இந்த இன முரண்பாடு பல தசாப்தங்களாக இலங்கையில் திட்டமிட்டு வளர்க்கப்படுகிறது. இலங்கையின் தேசியக் கொடி, அரசியல் சட்டம் என்பனவற்றிலிருந்து தொடங்கி பாடசாலைப் புத்தகங்கள் வரை பௌத்த சிங்களப் பேரினவாதம் கட்டமைக்கப்பட்டுள்ளது. தான் பேரினம் என்ற இறுமாப்பிலிருக்கும் ஓர் இனம் தாக்குதலுக்கு உள்ளாகுமிடத்து தனக்குப் பாதுகாப்புத் தேடவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகுமிடத்து அது தனக்குத் தேவையான பாதுகாப்புக்கு மற்றைய இனங்களே விலை கொடுக்க வேண்டும் என நினைக்கும். இன்று தமிழர்களையும் முஸ்லிம்களையும் பேரினவாதத்துடன் இசைந்து கொடுக்கு மாறும் நிலைமைகளைச் சமாளித்து வாழப் பழகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுமாறும் கூறுபவர்கள் அந்த விலையை கொடுங்கள் என்றே கூறுகிறார்கள். அதாவது அடிப் படையிலேயே பலமாக இருக்கும் ஒரு பேரின வாதம்தான் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக பயப்பிராந்தி கொள்ளும் பொழுதெல்லாம் மற்ற இனங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால் அதற்குரிய கட்டணத்தை அவர்கள் செலுத்தியே ஆகவேண்டும் என்று கூறுகிறார்கள்.

அண்மைக் காலங்களில் உலகெங்கும் பல்வேறு நாடுகளில் மதரீதியாக இனரீதியாக தேசிய வாதங்கள் புதிதாக வலுப்பெற்று வருவதைக் காணலாம். இந்த நிலைமையில் இனவாதம் செழித்து வளரத் தேவையான அகக்காரணிகளை எல்லாம் கொண்ட இலங்கையில் இஸ்லாமியத் தேசியவாதம் வளர்வது தவிர்க்க முடியாத ஒன்று. இவ்வாறு இருக்கையில் இஸ்லாமிய தேசியவாதத்தின் நீட்சியான இஸ்லாமிய தீவிரவாதம் இலங்கையில் வெளிப்பட இவ்வளவு காலம் எடுத்ததையிட்டு உண்மையிலேயே ஆச்சரியப்படவேண்டும்.

ஒரு இனத்துக்கும் ஒரு மதத்துக்கும் முன்னு ரிமை கொடுக்கும் அரசியல் சாசனம் இருக்கும் வரை இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு கிடைக் காது. இலங்கையில் இயற்றப்படும் சட்டங்கள் எல்லாவற்றுக்கும் அரசியல் சாசனம்தான் அடிப்படை. இந்த அரசியல் சாசனத்தை மாற்றுவதற்கு குரல் கொடுக்காமல் சிறுபான்மை இனங்களை சமாளித் துப் போகுமாறு கோருபவர்கள் அடிப்படை நோயைத் தீர்க்கும் மருந்தைக் கேட்காமல் அந்நோயினால் வரும் அறிகுறிகளுக்கு மட்டுமே மருந்து கேட் கிறார்கள்.

இவை ஒருபுறமிருக்க ஒரு பேரினவாதத்தின் பயப்பிராந்திக்கு பாரிய விலை கொடுத்துக் கொண் டிருக்கும் சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்கள் இப் பேரினவாதத்தை எவ்வாறு கூட்டாக எதிர்கொள் வது என்பது பற்றி சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது. அன்று தமிழரின் தேசியவிடுதலைப் போராட் டத்திலும் சரி, இன்று முஸ்லிம் மக்களின் இருப்புக் கான போராட்டத்திலும் சரி அந்நிய நாடுகளினதும், சக்திகளினதும் தாக்கம் இருக்கிறது. இந்த அந்நிய சக்திகள் தமது சொந்த இலாபங்களுக்காக அரசற்ற இந்த சிறுபான்மை இனங்களை பயன்படுத்திக் கொள் ளும். அந்தப் பயன்படுத்தலில் இருந்து தப்பவேண்டு மானால் பாதிக்கப்பட்ட இரு இனங்களும் ஓர் உடன்படிக்கைக்கு வரவேண்டிய தேவை உள்ளது.

## "ஒரு இனத்துக்கும் ஒரு மதத்துக்கும் முன்னுரிமை கொடுக்கும் அரசியல் சாசனம் இருக்கும் வரை இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு கிடைக்காது"

தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக முஸ்லிம்களை சிங்களப் பேரினவாதம் நன்றாகவே பயன்படுத்தியது. அதனை சிங்கள தலைவர்களும் முஸ்லிம் தலைவர்களும் வெளிப் படையாகவே ஒத்துக் கொண்டுள்ளனர். இன்று முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தமிழரைப் பயன்படுத்தும் சதியை முன்னெடுக்க சிங்கள பேரினவாதம் முற்படும். இது சிங்கள தலைவர்களுக்கு கைவந்த கலை. இதனை உணர்ந்து கொள்ள வேண்டியது ஒவ்வொரு தமிழருடையதும் கடமை. இன்று சிங்கள பேரினவாதத்தின் நேரடித் தாக்குதல்களுக்கு முகங் கொடுத்துக் கொண்டி ருக்கும் முஸ்லிம் சகோதரர்களுக்கு தமிழ் மக்கள் உதவி செய்ய வேண்டிய காலம் இது.

முஸ்லிம்கள் எமது விடுதலைப் போராட்டத் துக்கு துரோகம் இழைத்தவர்கள் என்பதால் இதனைத் தமிழர் உளப்பூர்வமாக செய்ய முன்வரு வதில் தயக்கம் இருக்கும். ஆனால் எமது எதிர்கால அரசியல் நலனை முதற்கொண்டு இந்த உடன்பாட்டை நாம் செய்யவேண்டும். அவ்வாறு உடன்பாட்டுக்கு போகுமிடத்து இருதரப்பினரும் அந்த உடன்பாட்டி னூடாக தாம் அடைய நினைப்பது என்ன என்பதை யும் அந்த உடன்பாட்டின் எல்லை என்ன என்பதை யும் தெளிவாக வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

நன்கு கட்டமைக்கப்பட்ட ஒரு பேரின வாதத்தை எதிர்கொள்வதற்கு எமக்கு வேண்டிய உதவியை எல்லா இடங்களில் இருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் இச்சந்தர்ப்பத்தின் விளைவாக தமிழரும் முஸ்லிம்களும் ஒரு உடன் பாட்டுக்கு வருவதை சிங்களப் பேரினவாத அரசு விரும்பாது. அதனைத் தடுப்பதற்கு முஸ்லிம்கள் மத்தியில் மட்டுமல்ல தமிழர் மத்தியிலுள்ள கைக் கூலிகளையும் அது பயன்படுத்தும். ஆகவே இத்தருணத்தில் நாம் செய்ய வேண்டியது முஸ்லிம் களுடன் ஒரு வெளிப்படையான ஒப்பந்தத்துக்கு வருவதே. அந்த ஒப்பந்தம் நாளடைவில் ஒரு கூட்டுக்கு வழிவகுக்குமானால் அதுவும் வரவேற்கத் தக்கதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம் நிறுவனத்தின் ஈழத்து சமூகப் பணிகள்

பானு

**தமிழர் நலன் சார்ந்து இயங்கும் நிறுவனங்கள், அமைப்புக்கள் பற்றியும் அவை என்னென்ன பணிகளை ஆற்றி வருகின்றன என்பது பற்றியும் எல்லோரும் அறிந்து கொள்வது அவசியமாகும். எல்லா அமைப்புக்கள், நிறுவனங்கள் பின்னாலும் தனி மனிதர்கள், மற்றும் குழுக்களின் அர்ப்பணிப்பும் விடா முயற்சியும் உள்ளன. அந்த வகையில் எம் மக்களின் மத்தியில் வேலை செய்யும் அமைப்புக்கள் குறித்து அறிந்து கொள்வது அவசியமாகும். இம்முறை அன்பே சிவம் அமைப்பு குறித்து பார்ப்போம்.**

ஈழத்து தமிழ் மக்கள் இன்று ஓரளவு பொருளாதாரத்தோடு வாழ்வதற்கு புலம்பெயர் நாடுகளில் உள்ள உறவுகளும், சமூக அமைப்புக்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் சுவிஸ் சூரிச் சிவன் கோயில் சைவத் தமிழ்ச் சங்கம் 25 ஆண்டுகளிற்கு மேலாக பரந்துபட்ட அமைப்பாக சைவத்துக்கும் தமிழுக்கும் மனிதாபிமானத்துக்குமான பணிகளை அதன் உப அமைப்புக்கள் மூலம் ஆற்றி வருகின்றது. ஈழத்தில் யுத்தம் முடிந்த பின் தமிழ் மக்களின் தேவையை அறிந்து அன்பே சிவம் என்னும் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் தாயகத்தில் உள்ள உறவுகளுக்கு நீண்ட காலம் அன்புக்கரம் கொடுத்து வருகிறது.

இவ் அமைப்பின் செயற்பாடுகளாக கல்வி, வாழ்வாதாரம், மனிதாபிமானம், நிவாரணப் பணிகள், வரப்புயர மர நடுகைத்திட்டம், தமிழர் கலாசார நிகழ்வுகள், சிவபுர வளாகம் போன்றவை உள்ளன. யுத்தம் முடிந்த பின் தமிழ் மக்கள் உயிர் இழப்புக்கள், பொருளாதார ரீதியான நெருக்கடிகள், உடல் அவயங்களின் இழப்பு, காணாமல் ஆக்கப்படுதல் என தமிழ் மக்கள் பல துயரங்களை சந்தித்து நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டு யாருமற்ற ஏதிலிகளாக வறுமையில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் எம் தாயக மக்களுக்கு அன்புக்கரம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கோடு “மண்சுமந்த மேனியர்” என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ் அமைப்பானது 21.03.2010 இல் மணற்காடு இடைத்தங்கல் முகாமில் தற்காலிகமாக வசித்துக் கொண்டிருந்த மக்களிற்கு உணவு, சத்துணவு, கல்வி போன்றவற்றிற்கான உதவித்திட்டத்தின் ஊடாக தனது பணியை ஆரம்பித்தது. இன்று, தாயகத்தின் பல பகுதியிலும் உதவி செய்வது மட்டுமல்லாமல் மலையகப் பகுதிகள் என நாட்டின் பல பகுதிகளிலும் பல பணிகளை செய்து வருகிறது.




மண்சுமந்த மேனியர் அமைப்பானது ஆரம்ப காலத்தில் ஜேர்மன் நாட்டின் நேசக்கரம் எனும் அமைப்போடு இணைந்து செயற்பட்டது. குறுகிய காலத்தின் பின்னர்28.08.2010 இல் திக்கம் கலாசார மண்டபத்தில் உத்தியோக பூர்வமாக தனி அமைப்பாக அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் போரால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த மக்களிற்கு பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்பட்டன. இவ் உதவித் திட்டங்களில் மாணவர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், துவிச்சக்கர வண்டிகள், வறிய குடும்பங்களுக்கான மாதாந்த உதவித் தொகை, ஆசிரியர்களுக்கான மாதாந்த உதவித்தொகை என்பன உள்ளடங்கின. சமயப் பெரியார்கள், கல்விமான்கள், பெரியோர்கள் எனப் பலர் இந்நிகழ்வில்கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு நடந்த காலப்பகுதியானது தாயகப் பகுதி மக்கள் சுதந்திரமாக நடமாடவோ, ஒன்று சேரவோ முடியாத ஒரு காலப்பகுதியாகும். புலம் பெயர்வாழ் உறவுகள் எம்மை திரும்பிப் பார்த்து உதவுகிறார்கள் என மக்களுக்கு ஒரு புத்துணர்வையும், மகிழ்ச்சியையும் இந்நிகழ்வு ஏற்படுத்தியது.

அத்துடன் சுவிஸ் தமிழ்க் கல்விச்சோலை நூற்றுக்கணக்கான மாணவர்களிற்கான மாதாந்த கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவையும், சுவிஸ் சொலத்தூண் தமிழர் நலன்புரிச் சங்கம் மாணவர்களுக்கான ஊக்குவிப்பு தொகை, சுயதொழில் முயற்சிகள், வாழ்வாதார உதவிகள், துவிச்சக்கர வண்டிகள், கற்றல் உபகரணங்கள் என்பவற்றை வழங்கி வந்தன. இவ்விரு அமைப்புகளும் மண்சுமந்த மேனியர் அமைப்போடு இணைந்து மனிதநேயப் பணிகளை செய்து வந்தன. தொடர்ந்தும் எம் மக்களிற்கான தேவைகளை வழங்கும் நோக்கோடு 2011 இலிருந்து இவ்வமைப்புக்கள் அன்பே சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பெயரோடு பணிகளை செய்து வருகின்றன.

**கல்வி**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேசங்களில் கல்வியாலும் வறுமையாலும் பின் தங்கிய இடங்களை இனம் கண்டு அவ் இடங்களில் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிப்புக்காக மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள், மாலைநேர கல்வி நிலையங்கள், கணனிப் பயிற்சி நிலையங்கள், மாண வர்களிற்கு கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள், காலணிகள், ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு, கல்வி நிலையங்களுக்கு கொட்டகைகள், தளபாடங்கள், முன்பள்ளிகளுக்கு கட்டிடங்கள் என பல்வேறு வகையான செயற்பாடு களை அன்பே சிவம் அமைப்பு செய்து வருகிறது. இதில் குறிப்பிடத்தக்க விடயமாக பார்வையற் றோருக்கான கணனி நிலையம் ஒன்றை கிளி நொச்சி பிரதேசத்தில் உருவாக்கி அதனூடாக பார்வையற்றோருக்கான தொழில் வாய்ப்பினையும் கற்றல் செயற்பாட்டையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

வன்னிப்பிரதேசங்களில் மக்கள் மீள்குடி யேற்றப்பட்ட காலத்தில் அடிப்படை வசதிகள் இல்லாமல் பாடசாலை செயற்பட தொடங்கிய காலத்தில் கிளி/முருகானந்தா கல்லூரியில் வரதன் தலைமையில் கணனிக் கூடம் அமைக்கப்பட்டு கிளிநொச்சி, முல்லைத்தீவைச் சேர்ந்த மாணவர் கள், இளைஞர்கள், யுவதிகள் அரச ஊழியர்கள் என பலர் கட்டங்களாக கல்வி கற்று சான்றிதழ்களை யும் பெற்று நல்ல நிலைக்கு அவர்கள் செல்ல இவ் அமைப்பு வழிகாட்டியது.

**வாழ்வாதாரம்**

மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக கிளி/முரு கானந்தா கல்லூரியில் இன்னொரு அங்கமாக தையல் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பல யுவதிகளுக்கு பயிற்சிகளை கொடுத்து சுயமாக தொழிலில் ஈடுபட வழியமைத்தது இந்நிறுவனம். அத்தோடு தொடர்ந்தும் அக்கரைப்பற்று வவுணதீவு பிரதேசங்களிலும் யுவதி களுக்கு தையல் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

அன்றாட வாழ்வாதாரத்திற்கு மிகவும் வறுமைப்படும் மக்களை இனம் கண்டு அவர்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றும் விதமாக பல சுயதொழில் முயற்சிகளுக்கான நிதிக் கொடுப்பனவு கள், தையல் இயந்திரங்கள், கால்நடைகளான ஆடுகள், மாடுகள், மற்றும் கோழிகள் என்பவற்றை வழங்கி சுயமாக தொழில் செய்து வாழ்வாதாரத்தை விருத்தி செய்ய உதவிபுரிகிறது.

**மனிதாபிமானம்**

அன்பே சிவம் அமைப்பானது சிறுவர் இல்லம், முதியோர் இல்லம், பாடசாலை, முன்பள்ளிகள், கல்வி நிலையங்கள் என்பவற்றுக்கு, உணவு, உடைகள் வழங்கி வருவதோடு பணத்தொகைகளையும் வழங்கி மாணவர்கள் நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி பயணிக்க வழியமைத்து கொடுக்கிறது.

**நிவாரணப் பணிகள்**

இவ் அமைப்பு கற்றல் செயற்பாட்டுக்கும், வாழ்வாதாரத்திற்கும் மட்டுமல்லாமல் தாயகத்–திலும் மலையகத்திலும் இயற்கை அனர்த்தம் ஏற்படும் போது உடனடியாக அந்தந்த பிரதேசங்களில் நேரடியாக அன்பே சிவம் தொண்டர்கள் மூலம் உலர் உணவுப்பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள், உடைகள் என்பவற்றை இனம், மதம், மொழி பாராமல் மனித நேயத்தோடு வழங்கி வருகிறது.

**வரப்புயர மரநடுகைத் திட்டம்**

தாயகப்பகுதிகளில் யுத்தம், இயற்கை அனர்த் தம் போன்ற காரணங்களால் ஏராளமான மரங்கள் அழிக்கப்பட்டன. இதை கருத்தில் கொண்டு கிராமங் கள், பாடசாலைகள், வீதியோரங்கள் என அனைத்து இடங்களிலும் மர நடுகை செய்வதோடு இலவசமாக மக்களிற்கு மரக்கன்றுகளையும் வழங்கி வருகிறது. இதற்கென தமிழர்களின் புனித மாதமாக போற்றப் படும் கார்த்திகை மாதத்தில் "வரப்புயர" மர நடுகை திட்டத்தை ஆரம்பித்தது. இன்று நாட்டில் அதிகரித்த வெப்பநிலை சூழல் ரீதியான மாறுபாடுகளை சமாளிக்க பயன்தரு மரங்கள் அவசியம். அதனால் இவ்வரப்புயர திட்டம் எமது தாயகத்தின் சூழல் பாதுகாப்புக்கு சிறந்த சேவையாற்றி வருகிறது.

**சிவபுர வளாகம்**

அன்பே சிவம் அமைப்பின் முக்கிய செயற் பாடாக சிவபுர வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. இவ் வளாகமானது நிரந்தரமானதும் நீடித்து நின்று மக்களிற்கு பயன்தர கூடிய வேலைத்திட்டம் ஆகும். இவ் வளாகத்தில் முதியோர் இல்லம், வணக்கஸ்தலம், தொழிற்பயிற்சி நிலையங்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள், விவசாயப் பண்ணைகள் என்பன அமைக்கப்படவுள்ளன. இது முதியவர்கள் பயன் பெறும் ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை என் இதயத்தில் வைத்திருப்பேன்




அமுது

கொலம்பியாவைச் சேர்ந்த இறையியலாளரும், லத்தீன் அமெரிக்காவின் மனித உரிமைகள் பிரச்சாரகரும், இத்தாலியில் உள்ள நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் உபதலைவரும், அதன் ஒரு அலகான இலங்கைக்கான மக்கள் தீர்ப்பாயத்தின் நீதிபதிகளில் ஒருவருமான Fr. Javier Moreno Giraldo அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவருடனான சந்திப்பொன்று தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஒருங்கிணைப்பில் கடந்த 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 04 மணிக்கு யாழ் டேவிற் விதியிலுள்ள கலைக்கோட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

குறிப்பாக கடந்த சித்திரை 21 இஸ்லாமிய பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்கு பின்னரான சூழலும், கடந்த 10 ஆண்டுகளில் தமிழ் மக்களின் அரசியல் வெளி எவ்வாறுள்ளது என்பது பற்றியும் அங்கு வந்திருந்த அரசியல் செயல்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரிடம் Fr. Javier Moreno Giraldo கேட்டு அறிந்து கொண்டார்.

இவர் இத்தாலியில் உள்ள நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் இலங்கை தொடர்பிலான இரு அமர்வுகளிலும் நீதவானாக பங்கெடுத்தவர். அத்துடன் சிறுபான்மை இனங்களின் நலனுக்காக தொடர்ச்சியாக குரல்கொடுத்து வருபவராகவும் விளங்குகின்றார். சந்திப்பின் போது பல்வேறு தரப்புக்களிடம் இருந்து ஒலித்த குரல்களின் முக்கிய பதிவுகள் கீழே:

வன்னியில் இருக்கின்ற சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் CSD பண்ணைகளில் 3500 பேரளவில் வேலை செய்கின்றார்கள். பெரும்பாலானோர் முன்னாள் போராளிகளாகவும், பெண் தலைமைத்துவக் குடும்பங்களை சேர்ந்தவர்களாகவும் இருக்கின்றார்கள். பண்ணைகளில் வேலைக்கு சேருபவர்கள் கடுமையான இராணுவ மயமாக்கலுக்குள் உள்ளபடியால் முதல் 21 நாள் கட்டாயம் பயிற்சிமுகாமுக்கு செல்ல வேண்டி இருந்தது. இப்போது 45 நாள் பயிற்சி, கிட்டத்தட்ட இராணுவப் பயிற்சி போல் இடம்பெறுகிறது. காலையில் தினமும் அணிவகுப்பு, மொட்டை வழிக்க வேண்டும் என்கிற நிபந்தனைகள் உள்ளன. அண்மையில் கூட கர்ப்பிணிப் பெண்ணொருவரை கட்டாயப்படுத்தி பயிற்சி முகாமுக்கு அனுப்பியதாக புகார் வந்திருந்தது.

இதையும் தவிர இராணுவத்தினர் அங்கு வேலை செய்பவர்களுக்கு ஆளையாள் மாறி கையொப்பம் வைத்து கடன் கொடுத்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் ஒரு நிரந்தர பொறிக்குள் மாட்டுப்பட்டு உள்ளார்கள். ஏனெனில் கடன் கட்டி முடிக்காமல் அவர்கள் நினைத்தாலும் வேலையால் நிற்க முடியாது. இராணுவத்தை ஒத்த சீருடையினை வாரத்தில் ஒரு நாள் கட்டாயம் அணிய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். இப்போது வாரத்தில் 2 தரம் அணிய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

போராட்டங்களில் ஈடுபடுபவர்கள், மனித உரிமை மற்றும் அரசியல் செயல்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக கண்காணிப்புக்குள் தான் உள்ளார்கள். அங்குள்ள பொது மக்களுக்கு கூட யார் புலனாய்வாளர் என்று கண்டுபிடிக்க முடியாதவாறு அங்கு நிலைமை திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இம்முறை முள்ளிவாய்க்காலில் மக்கள் குறைவாக பங்கெடுத்ததற்கு காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தின் அதிகரித்த சோதனைச் சாவடிகள் மட்டுமல்ல. ஏற்கனவே போனவர்களுக்கு திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளும் தான் காரணம்.

ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னர் வெளியாகின்ற செய்திகளை பார்க்கும் போது இது குறித்து அரசு, இராணுவத்துக்கு முன்னரே தெளிவாக தெரிந்திருந்தது. 2009 இல் போரை முடிவுக்கு கொண்டு வரும் போது தவறவிடப்பட்ட சில விடயங்களை, போராட்டத்தின் தொடர்ச்சியான சில விடயங்களை முடக்குவதற்காகவே இந்த ஈஸ்டர் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதா என்கிற ஐயம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது. அரசாங்கம் தனது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக நிகழ்த்தப்பட்ட குண்டுத்தாக்குதலாக தான் இது கருதப்பட வேண்டும்.

சர்வதேசத்தின் கவனம் ஐநாவில் இலங்கை அரசுக்கு காலக்கெடுவை விதித்து கண்காணித்துக் கொண்டிருக்கும் நிலை உள்ளது. பொறுப்புக்கூறலை உரிய முறையில் நிறைவேற்ற முடியாமல் இலங்கை அரசாங்கம் திணறிக் கொண்டிருக்கின்றது. அதனை திசை திருப்ப வேண்டிய தேவையும் அரசாங்கத்திற்கு உள்ளது. அரசாங்கம் ஸ்திரத்தன்மை இல்லாமலும் உள்ளது. மீளவும் வன்முறையொன்றை கையிலெடுத்தால் மட்டுமே முக்கிய பிரச்சினைகள் பின்னுக்கு தள்ளப்பட்டு வன்முறையும் அதன் பின்னரான நிலைமைகளும் பேசுபொருளாகும்.

அதன் மூலம் சர்வதேசத்துக்கும் பயங்கரவாதத்துக்கு எதிரானது என்கிற போர்வையில் எந்தச் சட்டத்தைக் கொண்டு வரலாம். பயங்கரவாத தடை சட்டம் தேவையில்லை என ஐநாவும் சொல்லிக் கொண்டு வருகின்றது. இதனால் ஒன்றில் அதனை தக்க வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிடின் அதனையும் விட கூடுதல் அதிகாரங்களுடன் ஒரு சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்கின்ற தேவை அரசுக்கு உள்ளது. குண்டுத்தாக்குதலின் தொடர்ச்சியாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டமும் இப்போது அவசரகாலச் சட்டமும் நடைமுறையில் வைக்கப்பட்டு உள்ளன. இதனால்த்தான் இந்தக் குண்டுத்தாக்குதலை அரசாங்கமே பின்னுக்கு நின்று நிகழ்த்தியிருக்கலாம் என்கிற சந்தேகம் உள்ளது.

**"பொறுப்புக்கூறலை உரிய முறையில் நிறைவேற்ற முடியாமல் இலங்கை அரசாங்கம் திணறிக் கொண்டிருக்கின்றது. அதனை திசை திருப்ப வேண்டிய தேவையும் அரசாங்கத்திற்கு உள்ளது. அரசாங்கம் ஸ்திரத்தன்மை இல்லாமலும் உள்ளது. மீளவும் வன்முறையொன்றை கையிலெடுத்தால் மட்டுமே முக்கிய பிரச்சினைகள் பின்னுக்கு தள்ளப்பட்டு வன்முறையும் அதன் பின்னரான நிலைமைகளும் பேசுபொருளாகும்"**

குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுக்காமல் விடுவது அல்லது தண்டனையிலிருந்து தப்பிக்க விடுவது தான் இன்று முஸ்லிம்களுக்கு எதிராக கலவரங்களை செய்தவர்களுக்கு உத்வேகத்தை கொடுத்துள்ளது. ஏனெனில் 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் பின்னரும் தண்டனை கிடைக்கவில்லை. தாங்கள் என்ன வன்முறை செய்தாலும், அதற்குரிய சாட்சியங்கள் இருந்தாலும் தங்களுக்கு எந்த தண்டனையும் கிடைக்காது என்கிற நிலை தான் உள்ளது. இம்முறை முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் தெளிவான CCTV பதிவுகளும் உண்டு. எந்த நடவடிக்கையும் இல்லை. என்ன செய்தாலும் அரசாங்கம் பாதுகாக்கும் என்கிற நிலை தான். தாக்குதல்கள் நடக்கப் போகின்றது என தெரிந்தும் அரசும், இராணுவமும் கைகட்டி வேடிக்கை பார்த்ததன் நோக்கம், அதன் பின்னரான அவர்கள் அடையக்கூடிய நோக்கங்கள் பல.

நாங்கள் சர்வதேச விசாரணை தான் வேண்டும். கலப்பு விசாரணையோ, உள்நாட்டு விசாரணையோ வேண்டாம் என்று கேட்பதன் அடிப்படையும் இது தான். சர்வ்தேச அரங்கில் தமிழ்த் தரப்பு இலங்கையில் நடந்தது இனப்படுகொலை எனச் சொல்ல போராடிக் கொண்டிருக்கும் போது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட எந்தவொரு தீர்மானத்திலும் 'தமிழர்களுக்கெதிரான' என்ற சொற்பிரயோகம் வரவில்லை. எல்லா இடங்களிலும் 'சிறுபான்மையினருக்கு எதிரான', 'மதக்குழுக்களுக்கு எதிரான' என்ற சொற்பிரயோகங்கள் தான் வருகின்றன. எம் அரசியல் செயல்பாட்டாளர்கள் சிலர் 'தமிழர்' என்று போடச் சொல்லவும் அப்படித் தேவையில்லை என்று சொல்கிற நிலைமை தான் இருந்தது. ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு பின்னரான வன்முறையையும் இலங்கை அரசாங்கம் மதக்குழுக்களுக்கு எதிரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"போர் முடிந்து 10 ஆண்டுகளில் நல்லிணக்கம், நல்லாட்சி எல்லாம் வந்த பிறகும் இந்தத் தீவில் இரண்டு அரசுகள் உள்ளன. வடக்குக்கு ஒரு நீதி தெற்குக்கு ஒரு நீதி என்பதில் அரசாங்கம் தெளிவாகவுள்ளது. அரசாங்கங்கள் மாறினாலும் அரசுகள் மாறுவதில்லை என்கின்ற வரலாற்றுப் படிப்பினையை மீளவும் எங்களுக்கு இது கற்றுத் தந்திருக்கின்றது"**

சிறுபான்மையினருக்கு எதிரான என்று தான் கொண்டுவரப் பார்க்கின்றது. குண்டுவெடிப்புக்கு பின்னரான நிலைமையை அரசாங்கம் தனக்கு சாதகமாக பயன்படுத்துகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் விழித்துக் கொள்ள வேண்டும்.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து மனிதாபிமான ரீதியில் நாங்கள் நோக்க வேண்டிய விடயங்கள் உள்ளன என்பது உண்மை. அது மிகப்பிரியதொரு அவலம். எங்களுக்கு அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், எங்களுடைய பிரச்சினையின் அடிநாதம் இதில் அடிபட்டுப் போகின்றது. எம் மக்களின் மன நிலையும் அதுதானே. புதுசாக ஒரு பிரச்சினை வந்தால் அதைப்பற்றி மட்டும் கதைப்பது. அரசியல மைப்பு சீர்திருத்தம் பற்றி இப்போது கதைப்பார் இல்லை. கடந்த 30 வருடத்துக்கும் மேலான எங்கள் போராட்டம் வீணானது போன்ற தோற்றப்பாடு அரசால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பொழுது, கொழும்பில் இருந்து வவுனியா வரை இருந்த பாதுகாப்பு நடைமுறைகளும், வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை இருந்த பாதுகாப்பு நடைமுறைகளும் வேறு. வவுனியா வரும் வரை அன்று ஊரடங்கு அமுலில் இருந்தபடியால் 10 நிமிடத்துக்கு ஒரு முறை பாதுகாப்பு தரப்பினர் வாகனத்தை மறித்து சோதனையிட்டனர். ஆனால், வாகனத்தில் இருந்து இறங்க வேண்டி வரவில்லை. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை உள்ள இராணுவச் சோதனைச் சாவடிகளில் இறங்கி ஏற வேண்டி இருந்தது. போர் முடிந்து 10 ஆண்டுகளில் நல்லிணக்கம், நல்லாட்சி எல்லாம் வந்த பிறகும் இந்தத் தீவில் இரண்டு அரசுகள் உள்ளன. வடக்குக்கு ஒரு நீதி தெற்குக்கு ஒரு நீதி என்பதில் அரசாங்கம் தெளிவாகவுள்ளது. அரசாங்கங்கள் மாறினாலும் அரசுகள் மாறுவதில்லை என்கின்ற வரலாற்றுப் படிப்பினையை மீளவும் எங்களுக்கு இது கற்றுத் தந்திருக்கின்றது.

தமிழர்களை அழிக்க வேண்டுமென சொல்லப் பட்ட அரசியலமைப்பில் பௌத்த நாட்டுக்கு முன் னுரிமை என சொல்லி இருக்கிறார்கள். பௌத்த விழாக்களை அரச விழாக்களாக காட்டச் சொல்லி பதாகைகள் எல்லாம் அரச வேலை செய்யும் நபர் களிடம் கொடுத்திருந்தார்கள். 18 ஆம் திகதி முள்ளி வாய்க்கால் இனவழிப்பு நினைவு தினம். அவர்களின் வெசாக் தினமும் அன்றுதான். அவர்கள் அலங்காரங் களைக் கட்டத் தயாராகும் போது, இராணுவ புலனாய் வாளர்கள் என கூறிக்கொண்டு வந்தவர்கள் நீங்கள் என்ன கட்டுகின்றீர்கள் வெசாக் தானா அல்லது முள்ளிவாய்க்கால் நினைவுப் பதாகையா எனக் கேட்டுள்ளனர்.

கண்காணிப்பு என்பது பச்சைச் சீருடையில் மட்டும் இல்லை. கடுமையான இராணுவமயமாக்கல் என்பது போர் முடிந்த பின்னரும் வடக்கு, கிழக்கு பகுதியில் அதிகரித்த நிலையில் தான் உள்ளது. ஈஸ்டர் குண்டுவெடிப்புக்களுக்கு பின் மட்டும் அதிகரிக்கவில்லை. 2015 இல் நாங்கள் முள்ளி வாய்க்காலுக்கு நினைவு தினத்தை அனுட்டிக்கச் செல்லும் போது இராணுவம் மறிக்கவில்லை. ஆனால் பவள் கவசவாகனத்தை கொண்டுவந்து முன்னுக்கு நிப்பாட்டி இருந்தவை. இவ்வாறு பயத்துடனான மனநிலை பொதுமக்கள் மத்தியில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இன்று எப்படி உலகளாவிய பயங்கரவாதம் வந்தது? அமெரிக்கா தான் ஐ.எஸ்.ஐ.எஸ் ஐ வளர்த்தது. முதலாளித்துவ நுகர்வு வாதத்தை வைத்துக் கொண்டு, நாடுகளைப் போர் சூழலுக்குள் தள்ளும் அமெரிக்கா போன்ற நாடுகளைத் தள்ளி வைத்துக் கொண்டு நாங்கள் முன்னுக்கு வரவேண்டும். அதே நேரம் முஸ்லிம் அடிப்படைவாதத்தையும் எதிர்க்க வேண்டும். இலத்தீன் அமெரிக்க நாடு களிலும் இதே பின்னணி தான் வரலாற்று ரீதியாக உள்ளது. இப்பொழுது எல்லாரும் சேர்ந்து வாழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். பாதிக்கப்படடவர்களுடன் சேர்ந்திருக்க வேண்டும். உடனிருப்பு அவசியமானது என்று சொல்கின்றோம். இன்று சிவில் சமூக அமைப்புக்கள் எல்லாவற்றுக்கும் மேலாக நின்று கட்சி அரசியல் நடனம் ஆடுகின்றது.

இலங்கையில் இன அழிப்பு என்பது 1930 களில் இருந்து இடம்பெற்று வருகின்றது. அதனை இலங்கை அரசு திட்டமிட்டு செய்து வருகின்றது. போர் தொடங்கின உடன் அவர்களுக்கு ஒன்று தெரிந்தது. இதன்மூலம் தமிழ் மக்களை ஒடுக்க முடியாது. இதனால் போரைப் பாவித்து கொன்றார் கள். சண்டை இனவழிப்பில் முடிந்த போது கூட அவர்களுக்கு தெரிந்தது, முழுமையாக தமிழர்களைக் கொல்ல முடியாது என. முஸ்லிம்களோ, மலையக தமிழர்களோ சிங்கள மேலாண்மையை ஏற்றுக் கொண்டது போல் தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதும் அவர்களுக்கு நன்றாக தெரிந்திருந்தது. 2010 க்கு பிறகு அவர்கள் தொடர்ச்சியாக இனவழிப்பையும் செய்து கொண்டு உளவியல் ரீதியானதொரு அழிப்பையும் செய்து வருகிறார்கள். குறிப்பாக எங்கள் இளைய தலை முறையினரிடம் சிங்கள மேலாண்மையை ஏற்றுக் கொள்வதற்கு நிறைய பயிற்சி வகுப்புக்கள், பாடசாலை ரீதியிலான சமூக, கலாச்சார இணைவு கள் போன்ற பல்வேறு வகையிலான நிகழ்ச்சி களை நடாத்தி வருகிறார்கள். சிங்கள மேலாண் மையை ஏற்றுக் கொள்ள வைக்கும் முயற்சிகள் நடக்கின்றன. இலங்கை முழுவதும் ஒரு நாடு. நாங்கள் ஒன்றாக இருப்போமென அவர்கள் சொல்கின்றார்கள். ஆனால், அங்கே வெளிப் படையாக சொல்லாதது, இலங்கை முழுக்க தங்கள் நாடு நீங்களும் ஒன்றாக வாழலாம் என்பதே.

இப்போது தமிழர்கள் இதுவரை செய்த போராட்டங்கள் பிழை என்றும் அதற்கு வெட்கப் படுவதாகவும் சொல்லும் புதிய பரம்பரை ஒன்று எம்மத்தியில் உருவாகி வருகின்றது. என்று அமெரிக்கா புரட்டாதி 11 உலக வர்த்தகமைய தாக்கு தல்களை வைத்து உலகத்தையே ஒடுக்க வெளிக் கிட்டார்களோ, அன்றே இலங்கை அரசாங்கத்துக்கு தமிழ் மக்களின் போராட்டத்தில் வெற்றியடைய ஆதரவு கிடைத்தது. அவ்வாறே சித்திரை 21 உம் இலங்கை அரசுக்கு நல்ல வாய்ப்பை கொடுத்திருக் கின்றது. தமிழர் தாயகத்தில் இராணுவ பிரசன்னத்தை முற்றாக எதிர்த்துக் கொண்டிருந்தோம். இன்றைக்கு எங்களுக்காக அவர்கள் வெயிலுக்குள்ள சோதனைச் சாவடிகளில் காவல் நிற்கிறார்கள் என்று நாங்களே சொல்லுகின்ற நிலைக்கு வந்துள்ளோம். எங்களுடைய சகோதரிகள், அம்மாக்களை கற் பழித்துக் கொன்ற, குண்டு வீசிக் கொன்ற அதே இராணுவத்தைக் கொண்டு எங்கள் பெண்கள் பாட சாலைகளில் கூட அவர்களின் உடமைகளை சோதிப் பதற்கு நாங்களே கொண்டு வந்து விட்டுள்ளோம். இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் போனால் இதெல்லாம் எங்களுக்கு சாதாரணமாகி விடும். எல்லா இன அழிப்போடு சேர்த்து இப்படியான உளவியல் ரீதியிலான இன அழிப்பிலும் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

இலங்கை ஒரு பௌத்த நாடு என்று கொழும்பு கர்தினால் சொன்னதை சிங்கள கிறிஸ் தவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால், தமிழ் கிறிஸ்தவர்களும் தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ள வில்லை. 70 வருடமாக தொடரும் இன அழிப்பில் உளவியல் யுத்தத்தை அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. ஈஸ்ட்டர் தாக்குதல் அதற்கு இன்னும் வலுச்சேர்த்திருக்கிறது. தமிழர் களை அழிப்பதற்காக இலங்கை அரசாங்கம் எந்த வித வெட்கமுமில்லாமல் யாருக்கும் சேவகம் செய்யவும், யாருக்கும் அடிமையாகவும், முழந் தாழிடவும் தயாராக இருக்கிறது. அதனால்த் தான் சீனா, மற்றும் மேற்குக்கு பின்னாலும் போகவும் தயாராக இருக்கினம். தமிழர்களை ஒழிப்பதற்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் உதவுவார்களாக இருந்தால் அவர்களுடனும் கூட்டுச் சேரக் கூடிய சிங்களப் பேரினவாதம் தான் இலங்கையில் உள்ளது. தமிழர்

**"தமிழர்களை ஒழிப்பதற்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் உதவுவார்களாக இருந்தால் அவர்களுடனும் கூட்டுச் சேரக் கூடிய சிங்களப் பேரினவாதம் தான் இலங்கையில் உள்ளது"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பிரச்சினைகளை தீர்க்கும் வரை சிங்களவர்கள் மத்தியில் இருக்கும் மன நிலையை மாற்ற முடியாது.

இலங்கையில் தமிழ் மக்கள் ஒரு நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்க அவர்களை ஒடுக்கி ஒரு கரையில் விட்டு விட்டு இனி தமிழர்களோ அவர்களின் எதிர்காலமோ தங்களை ஒரு இனமாக யோசிக்கேலாத அளவுக்கு ஒதுக்கி உள்ளார்கள். இப்போது சிங்களவருக்கு சவாலான சிறுபான்மை இனம் முஸ்லிம்கள். அவர்களுக்கும் அதே வேலையை தான் இவர்கள் செய்கின்றார்கள். புலிகளைக் காட்டி தமிழ் மக்களை ஒடுக்கினார்கள். அதேபோல் ஐ.எஸ் ஐக் காட்டி முஸ்லிம்களை ஒடுக்குகின்றார்கள். இதனை சமயங்களுக்கு எதிரான வன்முறை எனப் பார்க்க முடியாது. இலங்கையில் மூன்று இனங்கள். தமிழர்களை ஒதுக்கியாச்சு, இனி முஸ்லிம்களையும் ஒதுக்கினால் சரி என்கிற நினைப்பில் சிங்கள ஆளும் வர்க்கம் தெளிவாக செயற்படுகின்றது. கொழும்பு கர்தினால் மால்கம் ரஞ்சித்தும் இதனை தெளிவாக விளங்கப்படுத்தி விட்டுள்ளார். இலங்கை பௌத்த சிங்கள நாடு. இலங்கையில் இருக்கின்ற எல்லா இனத்தவரும், மதத்தவரும் பௌத்ததை தான் ஒரு மேல்வரிச் சட்டமாக பின்பற்ற வேண்டும் என்று. இலங்கையின் உயர்பீடமொன்றின் பேராயரைக் கொண்டு இந்தக் கருத்தை சொல்லுவிப்பதில் வெற்றியடைந்திருக்கிறது இலங்கை அரசு.

முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தங்களை தனித்தனி அடையாளமாக பார்ப்பதில்லை. உலக முஸ்லிம்களின் ஒரு பகுதியாக தான் பார்க்கின்றார்கள். உலக முஸ்லிம்களின் இருப்புக்கு ஐரோப்பிய, அமெரிக்க சக்திகள் எதிராக இருக்கின்றன. அந்த அச்சுறுத்தல்கள் எங்கெல்லாம் இருக்கின்றதோ அதனை அகற்றுவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றார்கள். இலங்கையைப் பொறுத்த வரையில் இந்தோ – பசுபிக் மூலோபாய திட்டத்தின் மூலம் இந்திய, அமெரிக்க, மேற்குலக சக்திகள் தங்கள் செல்வாக்கு வளையத்தினுள் இலங்கையை கொண்டுவர முயற்சிக்கின்றனர். அதனை அகற்றுவதற்காக தான் இந்தக் குண்டுவெடிப்பு நடந்திருக்கலாம். உள்ளூர் காரணிகளும் இருக்கின்றன. திகன போன்ற இடங்களில் முஸ்லிம்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டதும் காரணமாக இருக்கலாம். ஒரு சர்வேதேச தேவையும், உள்ளூர் தேவையும் இணைந்து மேற்படி குண்டுவெடிப்பு நிகழ்ந்திருக்கலாம். 2015 க்கு பிறகு பெயர் அளவில் ஒரு ஜனநாயக வெளி இருந்தாலும் தமிழ் மக்களை இனவழிப்புக்கு உள்ளாக்கும் செயற்பாட்டை அவர்கள் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றார்கள். இனப் பிரச்சினை என்பதே தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பது அழிக்கப்படுவது தான். அந்தத் தேசத்தைத் தாங்கும் தூண்களாக இருக்கின்ற நிலத்தை, மொழியை, பொருளாதாரத்தை, மக்கள் கூட்டத்தை அழிப்பது தான் உண்மையில் இனப்பிரச்சினை. இன்று காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் பிரச்சினை, காணி விடுவிப்பு என எதுவுமே தீர்க்கப்படவில்லை. ஆக்கிரமிப்பு மட்டுமே நடந்து கொண்டிருக்கின்றது. இன்று வீடுகளில் அரசியல் புத்தகங்கள் வைத்திருப்பதற்கே அச்சப்பட வேண்டிய சூழல் உள்ளது. இவற்றை வைத்திருப்பவர்களை அவசர காலச் சட்டத்தை பயன்படுத்தி கைது செய்யும் நிலையும் உள்ளது. இதனால் தான் இன்று தமிழ் மக்களுக்கு சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையொன்று தேவைப்படுகின்றது.

எல்லாக் கருத்துக்களையும் உள்வாங்கிக் கொண்ட பின் கொலம்பிய இறையியலாளர் Fr. Javier Moreno Giraldo கருத்து தெரிவிக்கையில், இறுதியாக அண்மையில் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்களின் பின்னர் இதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்கு உரிமைகள் எதனையும் வழங்கக் கூடாது என்பதில் அரசாங்கம் கரிசனையாக செயற்படுகின்றது. இங்கு இருப்பது எந்தவிதமான சமயப் பிரச்சினைகளும் இல்லை. தமிழ்மக்களுக்கு உரிமைகளை கொடுக்காமல் விடுவதில் தான் அரசாங்கம் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகிறது.

வத்திக்கானூடாக இது ஒரு சமய பிரச்சினை அல்ல என்கிற விழ்ப்புணர்வை ஏற்படுத்தலாம். தான் முள்ளிவாய்க்கால் சென்று முன்னாள் போராளிகளை சந்தித்த போது அவர்கள், தமிழ் மக்கள் தொடர்பில் சாதாரண சிங்கள மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என சொன்னதாக கூறினார். இங்கு கேட்ட விடயங்களை தொகுப்பாக்கி வத்திக்கானுக்கு பாப்பரசரிடம் சமர்ப்பிப்பதாகவும், வரும் மாதங்களில் நடைபெறவுள்ள கருத்தரங்குகள், மாநாடுகளிலும் இவை பற்றி பேசப் போவதாகவும் குறிப்பிட்டார். எதிர்காலத்திலும் தமிழ் மக்களை தன் இதயத்தில் வைத்திருப்பேன் எனவும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(24 ஆம் பக்க தொடர்ச்சி)

அந்தக் கணம் அங்கிருந்த அனைவர் மனதிலும் உறைந்துபோனது. சோகமே உருவான அந்தப் பிஞ்சுமுகம் அங்கிருந்த அனைவரையும் பாதித் தது. அந்தக் காட்சியின் மூலம் போரின் வலியின் அடையாளமாகிப் போயிருக்கிறாள் ராகினி.

ராகினி போர் வலியின் அடையாளம் மட்டுமல்ல, போர் முடிந்து ஒரு தசாப்தம் நிறைவடைந்தும் இன்னமும் கிடைக்காத – மறுக் கப்பட்ட நீதியின் அடையாளம் – முள்ளிவாய்க் காலில் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட போது சர்வதேசத்திடம் அபயம் கேட்ட – கைவிடப் பட்ட மக்களின் முகம். துன்பத்தின் மேல் துன்பத்தை – அவலங்களின் மேல் அவலங்களை சந்தித்த மக்களின் பிரதிநிதி.

ராகினி ஒற்றைக் கையுடன் தீபமேற்றும் அந்த புகைப்படம் மூலம் போர் முடிந்தும் நீளும் தமிழ் மக்களின் அவல நிலை வெளிப்பட்டுள்ளது. இவ்வாறான சர்வதேச கவனம் ஒரு தசாப்தத் தின் பின்னர்தான் சாத்தியப்பட்டுள்ளது. இந்தச் சாத்தியத்துக்கு மனிதப் பேரவல நினைவேந் தலை முள்ளிவாய்க்காலில் கடைப்பிடிக்கப்பட்ட நாளிலிருந்து அரசியலே கோலோச்சியிருந்தது. ஆனால், இம்முறை நினைவேந்தல் ஏற்பாடு கள் மக்கள் மயப்பட்டிருந்தது. இதனால் தான், இவ்வாறான சர்வதேச கவனங்களும் சாத்திய மாகின.

வழக்கமான நினைவேந்தல்களில் அரசி யல்வாதிகளில் சிலருக்குக் கிடைக்கும் தனி மரியாதைகள் நிறுத்தப்பட்டன. அதேவேளை, அனைத்து அரசியல்வாதிகளும் தனிமனித – கட்சி வேறுபாடுகளின்றி சமமாக நடத்தப்பட்டனர். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மக்கள் மயப்படுதலின் அவசியத்தையும் – அனைத்து அரசியல் சக்திகளையும் ஒரே இடத்தில் ஒன்றி ணைப்பதிலும் மக்கள் தலைமைக்குக் கிடைத்த வெற்றியும்கூட.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஒரு புறத்தில் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டாலும் கடந்த காலங்களில் கண்டுகொள்ளாமலிருந்த அரசும் இராணுவமும் இம்முறை முள்ளிவாய்க் கால் நினைவேந்தலை தடுப்பதில் – அல்லது அதை ஒரு வெற்றிகரமான நினைவேந்தலாக நடத்த விடாமல் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது.

**“முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மக்கள் மயப்படுதலின் அவசியத்தையும் – அனைத்து அரசியல் சக்திகளையும் ஒரே இடத்தில் ஒன்றி ணைப்பதிலும் மக்கள் தலைமைக்குக் கிடைத்த வெற்றியும்கூட”**

அடிப்படை வாத சக்திகளால் ஏப்ரல் 21 ஆம் நாள் நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து நாடாளாவிய ரீதியில் சோதனைக் கெடுபிடிகள் தொடங்கியுள்ளன. இராணுவத்தி னரில் பெரும் பங்கினர் வடக்கிலேயே நிலை கொண்டுள்ளனர். இதனால் வடக்கில் சோதனைச் சாவடிகளும் கெடுபிடிகளும் மற்றைய இடங்களை விட அதிகம்தான்.

இந்நிலையில் வடக்கில் முக்கிய ஸ்தலங்களுக்கு விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் எச்சரிக்கைகளால் மக்கள் கூடுவதைத் தவிர்க்க – தடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் மூலம் வழக்கமாகக் கூடும் மக்களின் எண்ணிக்கையை விட இம்முறை நினைவேந் தலில் கூடிய மக்களின் எண்ணிக்கை சற்றுக் குறைந்துதான் போனது.

தவிர யாழ். பல்கலைக்கழக மாணவ தலைவர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அவசரகால சட்ட அடக்குமுறையால், அச்சம் காரணமாக பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் மாணவர்கள் பங்கேற்கவில்லை. வழமைக்கு மாறான அதிக சோதனை மற்றும் பதிவு நடவடிக்கைகளால் மக்களின் ஒன்றுகூடல் தடுக்கப்பட்டது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

ஆனால், எத்தகைய கெடுபிடிகள் மேற் கொள்ளப்பட்டாலும், தமிழினத்தின் மீது கட்ட விழ்த்து விடப்பட்ட அழிவை நினைவேந்துவதை எந்த சக்தியும் தடுத்துவிட முடியாது என்பதை கட்டியம் கூறியுள்ளது முள்ளிவாய்க்கால் நினைவுநாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்வுகள் - 24

# சோதனைக் காலம்

நெம்பு

 **அப்புக்காத்தரும்...**  **அன்னமாக்காவும்...**


உயிர்ப்பயமில்லாமல் இப்ப கொஞ்சம் ஆசுவாசமாய் உலவிக் கொண்டிருக்கிறம் எண்டு பார்த்தால், இப்ப புதுத்தலையிடி ஒன்று வந்திருக்கு...


ஓமோம்... இப்ப எல்லாத்துக்கும் பயப்பிட வேண்டியெல்லே கிடக்குது...


அதைப் பார்த்தால் பயம், இதைப் பார்த்தால் பயம், அவனைப் பார்த்தால் பயம், இவளைப் பார்த்தால் பயம் எண்டு தெனாலி கமல் போல அலைய விட்டிட்டாங்கள் எங்களை...


அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்தானே


நல்லா இருந்த நாட்டுக்கு வந்த சோதனையைப் பார்த்தீங்களே...


எலியை வளையில வளைச்சுப் பிடிக்காமல் றோட்டில வந்தெல்லே தேடிக்கொண்டிருக்கினம்...


வளைக்கே கை வைக்கேலாது பாருங்கோ... பெரிய கைகள் சிலது காவலுக்கு நிற்குதாம்...


அப்ப வலி எங்கேயோ இருக்க, மருந்தை எங்கேயோ தடவிக்கொண்டிருக்க வேண்டியதுதான்..


ஒரே பஸ்சை ஒன்பது தரம் பாக்கிறாங்கள்... அடிக்கடி நடக்கச்சொல்லி உடற்பயிற்சியும் தாறாங்கள்...


வடக்கில மட்டும்தானாம் இப்படி வடிவான சோதனைகள்...


ஓ... அதுவும் அப்பிடியே...


கட்டி வளர வளரப் பெருமையாய்ப் பாத்துக் கொண்டு நிண்டு போட்டு, இப்ப வெடிச்சுச் சீழ் வடியத்தான் எல்லாரும் ஆலாய்ப்பறக்கினம்..


அதை இதை வேணுமெண்டு கேட்டால் குடுக்கலாம்... உயிர்கள் தான் வேண்டுமெண்டு நிக்கிறவையோட என்ன செய்யிறது ..?


என்னவோ இனிப்பிரச்சினை வராமல் ஆரம்பத்திலேயே பார்த்திட்டாச் சரி

## மனமும் மார்க்கமும்

மனதை வழிப்படுத்த
வழிபடும் இறைவன் பெயரால்
வன்மங்கள் செய்வதை
பொறுக்க முடியுதில்லை...

ஆண்டவன் உயிர்த்தான் என்று
கொண்டாட வந்தவர்களை
விண்ணோடு ஏகச் செய்த
மார்க்கம் போவது எங்கே...

எல்லாம் கிடைத்தும்
நிறைவுறா மனங்களை
மதங்களின் பெயரால்
கெடுத்ததே ஒரு கூட்டம்...

அளவற்ற அருளாளன்
உயிர்கொல்லச் சொல்வானோ...
அவனியில் இருப்பதெல்லாம்
ஆண்டவன் படைப்பன்றோ...

மனங்களே விழித்திருங்கள்...
மறையின் பெயராலே,
பள்ளங்கள் மறைந்திருக்கும்..
கறையைத் துடைத்து
முறையாய் முன்னேறுங்கள...
எல்லோரும் வாழலாம் நன்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எந்த சக்தியாலும் தடுத்துவிட முடியாது

ஐங்கரன்

எங்கும் அமைதி – மயான அமைதி நிலவுகிறது. அந்த அமைதியைக் மெலிதாய் கிழிக்கிறது ஒரு பிஞ்சுக் குரல்... மனதைப் பிழியும் குரல்...!

அந்தக் குரல் ஒலிக்கத் தொடங்கும் முன் – ஒரு சில நிமிடங்களுக்கு முன் – பரந்து விரிந்து கிடந்த சுடுமணலில் தங்கள் உடல் பரத்தி உறவுகளுக்காக அழுது புலம்பினார்கள் முள்ளிவாய்க்கால் திடலில் கூடியிருந்த மக்கள்.

இதேபோல அதற்கும் சற்று முன்னர்தான் அந்தச் சிறுமி நினைவேந்தலுக்காகக் கூடி நின்ற அனைவரையும் கனத்துப் போகச் செய்திருந்தாள். பத்தே வயது நிரம்பிய ராகினி என்ற அந்தச் சிறுமிக்கும் – முள்ளிவாய்க்காலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

ராகினி... –

போருக்கும் அவளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆம்... அவள் போருக்குள்ளேயே பிறந்தவள் – அகதியாகவே பிறந்தவள் – தன் தாயிடம் பால் குடித்துக் கொண்டிருந்தபோது இராணுவம் ஏவிய ஷெல்லுக்குத் தாயைப் பறிகொடுத்தவள். தன் தாயின் இறப்பைக்கூட அறியமுடியாத அந்தப் பச்சிளம் பாலகி தாயிடம் பசியாற முனைந்திருந்தாள். அந்தப் பேரவலப் போர் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்து ஒரு தசாப்தம் நிறைவுற்றுள்ளது.

இந்நிலையில்தான், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் பிரதான சுடரை ஏற்றினாள் – போரின் குழந்தையாகப் பிறந்த ராகினி. அந்தக் காட்சி அங்கு கூடியிருந்த – இராஜதந்திரிகள், உள்நாட்டு – வெளிநாட்டு ஊடகவியலாளர்கள், அரசியல்பிரபலங்களை மட்டுமல்ல உறவுகளை நினைத்து துன்பங்களைச் சுமந்து கொண்டிருந்த மக்களையும் நிலைகுலையச் செய்தது.

ஒற்றைக் கரத்தில் ஏந்திய நெருப்பை தீபத்தில் ஏற்றுவதற்கு ஆதாரமாக முழங்கையுடன் துண்டித்துப்போன இடது கரத்தை இணைத்த

(22 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 28.05.2019 அன்று குரு பிறிண்டேர்சில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org